விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 04 வியாழக்கிழமை (20.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

## சில்லறை விசாரணை குறித்தே ஜனாதிபதி மனம் குமுறினார்

### மைத்திரியின் சர்ச்சைக் கருத்துக்கு ராஜித விளக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் சி.ஐ.டி. எவ்.சி.ஐ.டி மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியன விசாரணைகளை செய்யாமல், வெறும் சில்லறை விடயங்களை பிடித்து விசாரணை செய்து கொண்டிருப்பது தொடர்பாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆத்திரத்தை வெளியிட்டிருப்பதாக அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதியின் இந்த உரையை அரச ஊடகங்கள் உட்பட அனைத்து ஊடகங்களும் திரிபுபடுத்தியதோடு கோத்தபாய ராஜபக்ஷவுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்ததாகவும் ராஜித சேனாரத்ன குற்றம்

23ஆம் பக்கம் பார்க்க....

## சிறுபான்மை சமூகங்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை!

### எதிர்க்கட்சித் தலைவரிடம் ரீட்டா தெரிவிப்பு



23ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கிலுள்ள இராணுவம்; வன்முறைக்கு அடித்தளம்

## லண்டன் இரட்டைநகர் உடன்படிக்கை நிகழ்வில் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(லண்டன்)

வட மாகாணத்தில் ஓர் இலட்சத்து 50 ஆயிரம் வரையிலான இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளமை வன்முறைக்கான அடித்தளத்தை இடுகின்றது என குற்றம் சாட்டியுள்ள வட மாகாண சபை முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், பொதுமக்களின் நிலங்கள், வாழ்வாதாரங்கள், வர்த்தகம், வளங்கள் ஆகியவற்றை பறித்தெடுத்திருப்பதுடன் அங்கு வாழும் விதவைகள் மற்றும் ஏனையவர்களின் நல்வாழ்வுக்கு இராணுவத்தினர் அச்சுறுத்தலாக இருந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



### படுகொலையான தமிழ் ஊடகவியலாளர்கள் குறித்து

## சர்வதேச விசாரணை கோரி யாழில் நேற்று போராட்டம்




03ஆம் பக்கம் பார்க்க....

## பஸ்-மோ.சைக்கிள் விபத்து

### குடும்பஸ்தர் பலி



(யாழ்ப்பாணம்)

பஸ்ஸுடன் மோ.சைக்கிள் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 10 மணியளவில் யாழ்.

23ஆம் பக்கம் பார்க்க....

## போலி ஆவண முறைகேடு; விளக்கமறியலில் திஸ்ஸ

(கொழும்பு)

போலி ஆவண முறைகேடு தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவை விளக்கமறியலில் வைக்குமாறு மேல் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய நேற்று அவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த போது, அவரின் பிணை மனுவை நிராகரித்த மேல் நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசல வீரவர்தன, திஸ்ஸ அத்த

23ஆம் பக்கம் பார்க்க....



## முன்னாள் இராணுவ அதிகாரியின் சடலம் நேற்று தோண்டி எடுப்பு

(கேகாலை)

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை தானே கொலை செய்ததாக கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்ட முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரியின் சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவிடமிருந்து மைத்திரிக்கு அழைப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தினர் டுபாய் நாட்டு வங்கியில் வைத்துள்ள கணக்கு விவரங்கள் தொடர்பில் அறிந்து கொள்ள

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வேலையாட்கள் தேவை**

எமது அச்சகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு 077 282 4321
கே.கே.எஸ் வீதி, முட்டாஸ் கடைச் சந்தி, யாழ்ப்பாணம் (சி-6165)

**வேலை ஆள் தேவை**

யுக்கி தையல் இயந்திரமூலம் துணி பாக் தைக்கத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :-
076 329 0663, 071 866 6788

**RAVEENS EMC KARAVEDDY**

GRADE 6 ADMISSIONS - 2017
ENGLISH MEDIUM
ADMISSION FORMS ARE AVAILABLE AT THE OFFICE
- GRADE 5 Scholars can only Apply
- Closing Date :- 24.10.2016

021 226 3321 P.Easwaranathan BSc. (Hons) Agric Dip.in Edu Director (C-6172)

**டிவிகன் ரெக்ஸ்ரைல்ஸ்**

73, நீராவியடி, யாழ்ப்பாணம்.

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து வாடிக்கையாளரின் நலன் கருதி (மொத்த/சில்லறை) மாபெரும் விலைத்தள்ளுபடி. 29.10.2016 அன்று வரை பெற்றுக்கொள்ள முடியும்.

சி.அருட்குமார்
0777 200 143 (6187)

**காணி விற்பனை**

A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில், மட்டுவில் தெற்கு துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 5 பரப்புடன் கூடிய உடைந்த திருத்தக்கூடிய வீடும், 3 1/4 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு. (6387)

077 8730 129


# மரண அறிவித்தல்



## அலேஸ் யோசெப்

செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும் மணிகாரன் சந்தி, தும்பளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அலேஸ் யோசெப் நேற்று (19.10.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அலேஸ் குணரட்ணம் றோஸ்மேரி தம்பதியினரின் மூத்த புதல்வரும், மேரி ஞானமலர் அவர்களின் அன்புக்கணவரும், றொபின்சன் (லண்டன்), பவிலா, றஜீப் (பிரான்ஸ்), கலிஸ்ரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டெய்சி, காலஞ்சென்ற றிச்சேட், ரட்ணம், வின்சன், லிமிற்றன், வெலிங்ரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருளம்மா -சந்தியாப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற மேரி திரேசா, மேரி ஜோசப்பின், அன்ரன் ஜெயநாதன், அருள்நாதன், றெனி, பேபி, வசந்தா ஆகியோரின் மைத்துனரும், பிரியந்தி, பிரியங்கா, பிரிண்டா, பிரித்தா யாழினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (22.10.2016) சனிக்கிழமை காலையில் பிறப்பிடமான செம்பியன்பற்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் நல்லடக்கத்திற்காக செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அவரது பூதவுடல் சென்.பிலிப்பு நேரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

குறிப்பு: அன்னாரின் பூதவுடல் நாளை (21.10.2016) வெள்ளிக்கிழமை வரை தற்காலிக வசிப்பிடமான மணிகாரன் சந்தி, தும்பளையிலேயே வைத்திருக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணிகாரன் சந்தி, தும்பளை. (சி-6169) தகவல் : குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



55 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும்

## திருமதி வசந்தகுமாரி ஸ்ரீவிக்னேஸ்வரன்

(சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்)

அவர்களை சீரும் சிறப்புடன் எல்லா நலன்களும் பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

உதவிப்பணிப்பாளரும், சக உத்தியோகத்தர்களும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்.மாவட்டம்.

(6384)

# நினைவு கூருகின்றோம் (இதய அஞ்சலி)



அமரர்

## வைத்திய கலாநிதி தம்பு குமாரசுவாமி

(கொக்குவில் மேற்கு)

**Dr.T.Kumaraswamy**

(M.B.B.S (Cey)
F.R.C.S (Eden),
(M.R.C.P, M.R.C.O.G)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டன், அமெரிக்கா (U.S.A) கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டவருமான அமரர் வைத்தியகலாநிதி தம்பு குமாரசுவாமி அவர்கள் 21.09.2016 அன்று கொழும்பில் அமரத்துவமான செய்தி கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகத்திற்கு பேரிழப்பையும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிமூத்த பழைய மாணவரான அன்னார் அவர்கள் கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியை கற்று அதன்பின் இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் உயர்நிலைக் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இதன் பிற்பாடு பட்டப்படிப்புக்காக வைத்தியத்துறையில் கொழும்பு, ஐக்கிய இராச்சியம் (UK), அமெரிக்கா (U.S.A) பல்கலைக் கழகங்களிலும் மேற்கொண்டு பட்டங்களை பெற்றுக்கொண்டார். "Gynecologist Thampu Kumar" என்றழைக்கப்படும் அமரர் அவர்கள் GYNECOLOGIST என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அமரர் அவர்கள் தான் கல்வி பயின்ற கொக்குவில் இந்துக் கல்லூரியில் கொண்ட அன்பின் நிமிர்த்தமாக இக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களின் நலன்கருதி இவர்களுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் ஊடாக புலமைப்பரிசில்கள் வழங்கி வருவது நினைவுகூரப்படுவதுடன் இன்றைய அன்னாரின் நினைவுநாளில் அன்னாரை பிரிந்து வாழும் மனைவி, மகள், உறவினர்கள் எல்லோருக்கும் கல்லூரியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய அவரின் குலதெய்வமாகிய கொக்குவில் மேற்கு ஸ்ரீமணியர்பதி சிவசுப்பிரமணிய சுவாமியையும் கல்லூரி குலதெய்வமான கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியையும் இறைஞ்சி நிற்கின்றோம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம். (யாழ்ப்பாணம்)**

# 31- ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## வேலுப்பிள்ளை சிவபாக்கியம்

கடந்த 21.09.2016 புதன்கிழமையன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு அமரர் வேலுப்பிள்ளை சிவபாக்கியம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து, எமது துயரில் நேரில் கலந்து கொண்ட உற்றார்,உறவினர்,நண்பர்கள் அயலவர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், அனுதாப செய்திகளை தொலைபேசி மூலமும் இணையதளங்கள் மூலம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் 21.10.2016 நாளை வெள்ளிக்கிழமை வீட்டுக்கிரியை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

5-ம் வட்டாரம்,
இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு.
T.P. 0774145722

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

(சி -6171)

# யாழ்.-கிங்ஸ்டன் இரட்டை நகர உடன்படிக்கை லண்டனில் கைச்சாத்து





பிரித்தானியாவின் கிங்ஸ்டன் அப்பொன் தேம்ஸ் (Kingston upon Thames) மாநகரத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இரட்டை நகர உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி யாழ்.நகரில் நேற்றுப் பாரிய போராட்டம்




படங்கள்:-உ.சாளின்

படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரி யாழில் நேற்று 19 ஆம் திகதி போராட்டம் ஒன்று இடம்பெற்றது. யாழ்.ஊடக அமையம் ஏற்பாடு செய்துள்ள இந்த போராட்டத்தில் வடக்கு, கிழக்கை சேர்ந்த அனைத்து ஊடக தரப்பும் கலந்து கொண்டு நீதியான விசாரணையை வலியுறுத்தியிருந்தனர். கொல்லப்பட்ட ஊடகவியலாளரான நிமலராஜனின் 16 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டே இந்த போராட்டம் நடைபெற்றது.

மேலும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் இன்றி பணியாற்றுவதற்கு அனைத்து மட்டங்களிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தகவலறியும் உரிமை சட்டத்தை உடனடியாக அமுல்படுத்தல் என்ற கோரிக்கைகளும் இதன்போது முன்வைக்கப்பட்டன. நேற்றுக் முற்பகல் 10 மணியளவில் யாழ்.பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பமான போராட்டத்திற்கு தென்பகுதி ஊடக அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்து அதன் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னதாக முற்பகல் பத்து மணியளவில் யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து யாழ்.பிரதான பேருந்து நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. நல்லாட்சி அரசே ஊடக அடக்குமுறை வேண்டாம். மகிந்த வழியில் மைத்திரி. ஊடக சுதந்திரம் புதைகுழியில். கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் ஏந்தியிருந்தனர்.

பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பமாகிய இந்த போராட்டம் ஆஸ்பத்திரி வீதி ஊடாக பேரணியாக நகர்ந்தது. இந்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பா.கஜதபன்.மார்க்சிச லெனினிச கட்சியின் தலைவர் செந்திவேல், வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் எஸ்.சஜீவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்ட நிலையில் தென்னிலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் மட்டுமே விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் இதுவரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை. (இ-4)

## கீரிமலை கடற்கரையில் மழை வேண்டி யாகம்

நாட்டில் ஏற்பட்டுள்ள வெப்ப காலநிலையை போககுவதற்கு மழை வேண்டி யாகம ஒன்று இன்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் நண்பகல் வரை கீரிமலை கடற்கரைப் பகுதியில் நடைபெறும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தொடர் வெப்பநிலை காரணமாக கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குடி நீர் பற்றாக்குறை ஏற்படும் அவலநிலை உருவாகியுள்ளது.

எனவே சமய குரவர்கள் மழையை வேண்டி பாடிய மழைப்பதிகங்களை பாடியும் செந்தமிழ் குருமார்களால் கீரிமலை கடற்கரை பகுதியில் உள்ள முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகில், குழந்தை வேல் சமாதிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவலிங்க பெருமானுக்கு முன் மழையை வேண்டி பிரார்த்தனை நடைபெறவுள்ளது. இந்த யாகத்தில் அனைத்து மக்களும் கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை சைவமகாசபை அறிவித்துள்ளது. (இ-9)

## சிகிரியா ஓவியங்களை பாதுகாக்கும் இத்தாலிய இரசாயனப் பதார்த்தம்


வரலாற்று சிறப்புமிக்க சிகிரியா குன்றில் அமைந்துள்ள ஓவியங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக இத்தாலியில் இருந்து அதிக விலை கொண்ட இரசாயன பதார்த்தம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் சிகிரிய ஓவியங்கள் தொடர்பில் ஆய்வில் ஈடுபட்ட இத்தாலிய ஓவிய பாதுகாப்பு நிபுணர்களால் இந்த இரசாயன பதார்த்தம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இரசாயன பதார்த்தத்தை பயன்படுத்துவதன் மூலம் ஓவியங்களில் காணப்படும் தெளிவற்ற தன்மையை குறைத்து, அவற்றின் இயல்புத் தன்மையை தொடர்ந்தும் பாதுகாக்க முடியும் என தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இரசாயனப் பொருளை அடுத்த வாரம் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## பசில் உட்பட நால்வருக்கு எதிராக குற்றப்பத்திரிகை



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட நால்வருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து 2 கோடியே 94 இலட்சம் செலவீட்டில் முன்னாள் ஜனாதிபதியின் படத்துடன் கூடிய நாட்காட்டி அச்சிடல் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு தொடர்பிலேயே இவர்களுக்கு குற்றப்பத்திரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வழக்கு விசாரணையின் போது நேற்று குற்றப்பத்திரிக்கை வழங்குவதாக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## திவிநெகுமவை சமுர்த்தியாக மாற்ற அனுமதி




திவிநெகுமவுக்கு பதிலாக சமுர்த்தி எனும் பதத்தை உபயோகிப்பது குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

திவிநெகும எனும் பதத்திற்கு பதிலாக சமுர்த்தி எனும் பதத்தை உபயோகிக்கும் வகையில் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க திவிநெகும சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், பின்னர் அதனை அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குமான யோசனைக்கே இவ்வாறு அனுமதி கிட்டியுள்ளது.

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இதனை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA

*No: NP/14/41(15)/03/tender/2017* *Date:* 2016.10.19

**2017 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்**

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 01.01.2017 தொடக்கம் 31.12.2017ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 21.10.2016 - 03.11.2016 பி.ப 2.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 04.11.2016 நண்பகல் 12.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 04.11.2016 பி.ப 2.00 மணிக்கு**

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 8668000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 181000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 2201000.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 55300.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 46000.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 61000.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 160000.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 160000.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 79500.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 42500.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 17699000.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை/ கோழீக்கடை | 500.00 | 5000.00 | 55560.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 500.00 | 1000.00 | 55100.00 | |
| 4 | மல்வம் சந்தை | 500.00 | 1000.00 | 26600.00 | |
| 5 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 10000.00 | 225000.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 208000.00 | |

01. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் “தவறுநராக” கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
03. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 11% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
04. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2016.12.05ம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்கு தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2016.12.05ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
05. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
06. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
07. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
08. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடைக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர் குறிப்பிட்ட இடத்தில் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இணைக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **“செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்”** என்ற முகவரிக்கும் அரக்கு முத்திரையிடப்பட்டு மறுபிரதியினை **“பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கும் அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.சுதர்சன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(C-6170)

# மின்சார துண்டிப்பு கைவிடப்பட்டது!

(கொழும்பு)

நாடு முழுவதும் பல வலயங்களாகப் பிரித்து அமுல்படுத்தப்பட்டிருந்த மின்சார துண்டிப்பை, உடன் நடைமுறைக்கு வரும் வகையில் கைவிடுவதற்கு மின்சக்தி மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பரிந்துரைக்கமைய, மின்சார துண்டிப்பு உடனடியாகக் கைவிடப்பட்டுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக மின்சார விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்க இயந்திரம் திருத்தப்பட்டு வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால் மின்சாரத் துண்டிப்பு கைவிடப்படுகிறது என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

# பிள்ளையான் மீதான விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில். இவரை நேற்று புதனகிழமை மீண்டும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 2ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில வைக்கும்படி நீதிபதி மா.கணேசராசா உத்தரவு பிறப்பித்தார்.

இக்கொலையுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா (பிரதீப் மாஸ்டர்), அக் கட்சியின் முன்னாள் உறுப்பினரான ரெங்கசாமி கனகநாயகம் (கஜன் மாமா) மற்றும் படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எம்.கலீல் ஆகியோர் மீதான விளக்கமறியலும் எதிர்வரும் 2ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான சந்தேக நபரொருவருக்கு பிணை வழங்கும் அதிகாரம் மேல்நீதிமன்றத்திற்கு கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டு கடந்த மாத முற்பகுதியில் அவரின் மனு நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

சேல்ஸ்மான் தேவை
O/L, A/L படித்த புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ளோர் தொடர்பு கொள்ளவும். (யாழ். நகர்)
0777 035 457
(ஜ-6390)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் பிரதி அதிபராக கடமையாற்றி 20.10.2016 அன்று சுயவிருப்பில் ஓய்வு பெறும் திரு. சர்வேஸ்வரக்குருக்கள் பிரண தார்த்திகரசர்மா அவர்களது சேவையை பாராட்டுவதுடன் அவரது ஓய்வு காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்
யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்,
ஏழாலை.

# இழுவைப் படகுகளின் தொழில் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரி யாழில் நேற்றுக் கவனயீர்ப்பு போர்.



## பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜரும் கையளிப்பு



படங்கள்:- பொ.சோபிகா

(யாழ்ப்பாணம்)

**உள்ளூர் இழுவைப் படகுகளின் தொழில் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தக்கோரி நெடுந்தீவு பகுதி மீனவர்களால் நேற்றைய தினம் யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் யாழ் கடறறொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது**

நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் அப்பகுதி மீனவர்கள்கலந்துகொண்டு வடமாகாண ஆளுநர், யாழ் மாவட்ட அரச அதிபர், யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர்களிடம் குறித்த விடயம் தொடர்பாக மகஜர் ஒன்றும் கையளித்திருந்தனர்.

அவர்கள் கையளித்திருந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நெடுந்தீவுப் பிரதேசமானது யாழ்குடா நாட்டிலிருந்து கடலால் பிரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் பல்வேறு நிலைகளிலும் பின்தங்கிக் காணப்படுகின்றது.

இங்குள்ள பெரும்பாலானோர் கடற்றொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில் தற்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலானது ஓரளவு குறைவடைந்துள்ள நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தை சேர்ந்த உள்ளூர் இழுவை மடிப் படகுகளின் அடாத்தான செயற்பாடானது அதிகரித்துக் காணப்படுகின்றது.

எமது நெடுந்தீவு வாழ் மீனவர்கள் அதிகமானோர் கட்டுமரங்களிலும் சிறு படகுகளிலும் நெடுந்தீவை அண்மித்த பகுதிகளில் குறிப்பாக நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடைப்பட்ட பகுதியில் சிறுதொழில்களைச் செய்து வருகின்றோம்.

இதனை நம்பியே எமது குடும்ப ஜீவனோபாயம் தொடர்கின்றது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இழுவைமடிப்படகுகள் எமது பிரதேசத்தின் கரையோரத்தை அண்மித்த கடற்பகுதியில் கிட்டத்தட்ட 200 மீற்றர் தூரத்திற்குள் அடாத்தான முறையில் இழுவை மடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றன.

இவ் இழுவை படகுகள் எமது கடல் வளத்தை மோசமான முறையில் அழித்துச் செல்வதுடன் எமது மீனவர்களின் மீன்பிடி வலைகளையும் இழுத்துச் சென்று சேதப்படுத்தி நாசம் செய்து விடுகின்றன. இதனால் எமது தொழிலாளர்கள் பெரும் இழப்புக்களை எதிர்கொள்கின்றார்கள். தொழிலுக்கு செல்ல முடியாமல் முடக்கப்படுகின்றார்கள்.

எமது வருமானம் மோசமடைந்துவிட்டது. ஒருவேளை உணவுக்காக துன்பப்படும் குடும்பங்களும் எம்மிடம் வாழ்ந்து வருகின்றார்கள். எமது தொழிலாளர்கள் தமது பாரம்பரியதொழிலை கைவிட்டு கூலிவேலைகளை நாடிச் செல்லும் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது.

இது எமது பிள்ளைகளின் கல்வியில் கூட தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களும் கூலி வேலைகளை நாடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பல தரப்பினரிடம் நாம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே "எமது நெடுந்தீவு பிரதேசத்தை அண்மித்த வகையில் எமது தொழிலாளர்கள் சிறுதொழில் புரியும் கடற்பரப்பில் இழுவை மடித் தொழில் புரியும் இழுவைப் படகுகளை அகற்றி எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டுத் தரவேண்டும்.

எனவே பட்டினிச்சாவை எதிர்கொண்டிருக்கும் எமது மீனவக் குடும்பங்களின் துன்பநிலையினைகருத்திற்கொண்டு எமது கோரிக்கை தொடர்பாக மேலான கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டு நிற்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
164, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# மரண அறிவித்தல்

## அமரர் வைத்திலிங்கம் மோகனசுந்தரம்



கொண்டாவீதோட்டம் கம்பர்மலையை வசிப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் மோகனசுந்தரம் கடந்த 17 ஆம் திகதி இரவு காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று ஊரிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர். 077 373 8321**

# இராசி பலன்

20.10.2016
(ஐப்பசி 04, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு.
பஞ்சமி முன்னிரவு 11.10 மணிவரை
ரோகினி காலை 6.14 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 4.52 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந். | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம் மாலை 5.26<br>இற்கு<br>மிதுன-சந். | | |
| | | | ராகு |
| செவ் | சனி<br>சுக் | சூரி<br>புத | குரு |

**மேடம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** ஆழ்ந்த சிந்தையுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வியாபாரத்தில் மாற்றம் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கடகம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** சிறப்பான நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தந்தைவழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்துவீர்கள், உடல் நலனில் அதிக கவனம் எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** பகல்-இரவாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சுவாஸ்திர நன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** இனந்தார் பகை மாற, எடுத்த முயற்சிகள் கைகூடும், பெருங்காலத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்:** மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் உதவிகளுண்டு.

# எமது கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

கடந்த கால இடப்பெயர்வுகளின் மூலம் எமது பாரம்பரிய கலாசாரங்கள் அனைத்தும் மாறிப்போயுள்ளன. அவை அனைத்தும் படிப்படியாக மாற்றப்பட்டு எமது கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மூத்த பிரஜைகளுக்கான தேசிய கொள்கையினை தயாரிப்பதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மூத்த பிரஜைகளை மதிக்கும் பழக்கவழக்கங்கள் எம்மிடையே அருகி வருகின்றன. கடந்த கால இடப்பெயர்வுகளின் மூலம் எமது அனைத்து செயற்பாடுகளும், கலாசாரமும் மாறிவிட்டது.

மற்றவர்களை மதிக்கும் பண்பு எமக்கு வேண்டும். அதை படிப்படியாக பழக வேண்டும். மதிக்கும் பழக்க வழக்கங்கள் குடும்பத்தில் இருந்து தான் வர வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் பெற்றோர்கள் சொல்லி கொடுப்பதன் படி தான் பிள்ளைகள் நடப்பார்கள். எம்மிடையே மாற்றம் வேண்டும்.

மூத்த பிரஜைகள் தமக்கான கோரிக்கைகள் பலதை முன்வைத்திருந்தனர். அதன படி பிரதேச ரீதியாக பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவது, மாதாந்த கொடுப்பனவாக 2000 ரூபாய் வழங்குவது தொடர்பாகவும் மூதத பிரஜைகளுக்கு கொடுக்கப் பட்ட அடையாள அட்டையை சரியான முறையில் பயன்படுத்துவது தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்படும்.

அறிவால் செயற்படுத்தும் காரியங்களை விட அனுபவம் தான் உடனடியாக கூடுதலான பலனை அளிக்கும். அந்த வகையில் மிக முக்கியமாக மூத்தோரின் கோரிக்கைகள் உள்வாங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு செயல் வடிவம் கொடுப்போம்.

தொடர்ச்சியாக மூத்தோரிடையே கலந்துரையாடல்களை மேற்கொண்டால் நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கு அது உதவியாக இருககும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பேரவை செயலக இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு நாளை

வடக்கு மாகாண சபையினைப் பலப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஆசிய மன்றத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடனும் அவுஸ்திரேலிய அரசின் நிதிப் பங்களிப்புடனும் வடக்குமகாணசபை பேரவைச் செயலகத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளம் ,இலத்திரனியல் நூலகம் மற்றும் சுட்டவள நிலையம் ஆகியவற்றின் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைதடியிலுள்ள வடமாகாண சபை பேரவைச் செயலகத்தில் இடம் பெறும் என வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவாஞானம் அறிவித்துள்ளார். (இ-3)

## ‘கலை ஞானச்சுடர்’ விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

நல்லூர் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் வழங்கப்படும் கலை ஞானச்சுடர்விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இசை, நடனம், கவிதை, எழுத்துத்துறை, ஊடகத்துறை, நாடகம், இசை நாடகம், நாட்டுக்கூத்து, கிராமிய நடனம், தாளக்காவடி, ஓவியம், சிற்பம் போன்ற கலை இலக்கிய துறையில் நீண்டகாலம் சேவையாற்றிய 60 வயதுக்கு மேற்பட்ட நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். முழுப்பெயர், விலாசம், கிராம அலுவலர் பிரிவு, பிறந்த திகதி, கலைச்சேவை விபரம், தொ.பே.இல. ஆகியன முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்களை நாளை மறுதினம் 22 ஆம் திகதிக்கு முன்பாக நல்லூர் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கும்படி பிரதேச செயலர் ஆ.சிறி அறிவித்துள்ளார். (இ)



சில்லாலை சென்.ஜேம்ஸ் முன்பள்ளியின் கூடி மகிழ்வோம் செயற்பாட்டு திறன் விழா கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

## தவறவிட்ட பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத்தின் போது தவறவிடப்பட்ட பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவ காலத்தின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட கைக் கடிகாரங்கள், மோட்டார் சைக்கிள் திறப்புகள், பணப்பைகள் போன்ற பொருட்கள் பருத்தித்துறை பிரதேச செயலக உற்சவகால பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவற்றை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அலுவலக நேரத்தில் உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-3)

## கலை, கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையின் கலை, கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டம் நாளை 21 ஆம் திகதி




வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை உருவாக்குவோம் எனும் தலைப்பில் கருத்துரையினை சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைத்தன்யா வழங்குவார். (இ-3)

## யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதியும் சோலைவரி, வியாபார வரி செலுத்துதல், துவிச்சக்கர வண்டிகளுக்கான இலக்கத் தகடு வழங்கல் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காகவும் ஒழுங்கு செய்யப்பட்ட நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை 7 ஆம் வட்டாரம் சென் .அன்ரனீஸ் வீதியில் அமைந்துள்ள பாசையூர் மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் சோலை வரி, வியாபார வரி, தண்ணீர் வரியினை செலுத்தி உதவுமாறு யாழ். மாநகர சபை பிரதி ஆணையாளர் ஆ.சீராளன் அறிவித்துள்ளார். (இ-3)

## தியானப்பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராம் சந்த்ர மிஷன் வழங்கும் சகஜமார்க்கத் தியானப் பயிற்சி வகுப்பு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிமுதல் 5.30மணிவரையும் நாளை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 9.30மணி வரையும் நாளை மறுதினம் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிமுதல் 9.30 மணி வரையுள்ள மூன்று நாட்களும் பயிற்சிகள் இல.161 முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சென்னை ஸ்ரீராம் சந்த்ர மிஷன் தலைமையக ஸ்ரீ முத்துகுமரனால் இப்பயிற்சி வகுப்புக்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நினைவுப் பொதுக்கூட்டம்

புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் சாதிய தீண்டாமைக்கு எதிரான 1966 ஒக்டோபர் 21 எழுச்சியின் 50 ஆவது ஆண்டு நினைவுப் பொதுக்கூட்டம் யாழ்.றிம்மர் மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30மணியளவில் தோழர் சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையால் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வெகுமதிகள்

### விண்ணப்பங்கள் கோரல்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையால் 2016ஆம் ஆண்டு தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வெகுமதிகள் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறு சித்தியடைந்த ஒன்பதாயிரம் பேருக்கு தலா பதினையாயிரம் ரூபா வீதம் வெகுமதிகள் வழங்கப்படவுள்ளன. இவ்வெகுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்களை தலைமை அலுவலகத்தில் அல்லது பிரதேச கிளை அலுவலகங்களில் அல்லது www.etfb.lk என்ற இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் மார்டின் வீதி இல. 70 இல் அமைந்துள்ள ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை பிரதேச அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் நேரிலோ அல்லது தபால் மூலமோ புலமைப்பரிசில் அலுவலர் புலமைப்பரிசில் பிரிவு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை இல.92, கிருள வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு-5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பொதுக்கூட்டம்

யாழ்.பிரதேச செயலகத்தின் ஆயுர்வேத பேணிப்பாதுகாத்தல் சபை தொடர்பான பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற இருப்பதனால் யாழ்.பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியிலுள்ள ஆயுர்வேத வைத்தியர்கள், ஆர்வலர்களையும் தவறாது பங்குபற்றி நிர்வாகத் தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

# காரைநகர் பிரதேச சபை, காரைநகர்
## கேள்வி அறிவித்தல் - சபை நிதி 2016

2016 ஆம் ஆண்டிற்கான சபைநிதியில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ள கீழ் காணப்படும் வேலைக்காக பின்வரும் இக்ராட் பதிவுபெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல | வேலையின் விபரம் | வேண்டப்படும் தரம் | மதிப்பீட்டுத் தொகை (மில் ரூபா) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவ கட்டணம் (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| 01 | வெடியரசன் வீதி 1 ஆம் குறுக்குத்தெரு | C8 அல்லது அதற்குமேல் Road | 2.5 | 20,000.00 | 1,000.00 |

கேள்விப்படிவம் வழங்கல் :- 20.10.2016 தொடக்கம் 02.11.2016 பி.ப. 03.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றல் :- 03.11.2016 பி.ப. 01.30 மணிவரை
கேள்வி திறத்தல் :- 03.11.2016 பி.ப. 02.00 மணி

1. செயலாளர், காரைநகர் பிரதேச சபை, காரைநகர் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேலைக்கான கேள்வி கோரப்படுகின்றது.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப் பத்திரப் பணத்துடன் மீளளிக்கப்படாத 11% பெறுமதி சேர் வரி (VAT) யும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) யும் செலுத்தப்படல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்க வேண்டும்.
6. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை "செயலாளர் , காரைநகர் பிரதேச சபை, காரைநகர்" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போட வேண்டும். மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமை அலுவலகம்
காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.
19.10.2016

செயலாளர்
காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.


# மின் துண்டிப்பா?
## கவலை வேண்டாம்...




MICRO PC SYSTEMS
Solar Division
www.solarpowerlk.com

Micro PC Systems
#218, Hospital Road, Jaffna.
Tele : (94)21 222 5893
Colombo : 077 730 8417 | Jaffna : 077 312 6712 | Nelliyadi : 077 303 9536
Kilinochchi : 077 396 3278 | Vavuniya : 077 396 3284 | Dealers : 077 307 6409



# FREE, FREE, FREE

ISO 9001-2008 certified Training Intitute

யாழ்.மண்ணில் முதல் தடவையாக

ஹோட்டல் பாடசாலை
யுலிஸ்ரன்

இல. 17/3, புகையிரத நிலை ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**பயிற்சி வகுப்புக்கள்:**

I உணவு மற்றும் குளிர்பானங்கள் உபசரிப்பாளர் (F/B)
II வீட்டுப் பராமரிப்பாளர்கள் (H/K)
III வரவேற்பு அலுவலகர் (F/O)

அரசாங்கத்துடன் இணைந்து நடத்தப்படும் சுற்றுலா பாடநெறிகள்.

மேலதிக தகவல்களுக்கு
077 401 3062/ 021 492 7107

(6379)



கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: 27 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L ஆசிரியர் (அரசு)
தொ.இ: B/6319

பிறப்பு: 1981இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா: 41
உயரம்: 5'5'
தகைமை/தொழில்:B.S,M.Sc U.K PR
தொ.இ: B/6321

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 41செவ் 2 இல்
உயரம்:5.7
தகைமை/தொழில்:HNDA Develop. Officer
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/6322

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 16 சூரி,செவ் 5 இல்
உயரம்: 168cm
தகைமை/தொழில்:B.Sc(Hon), Q.S அபுதாபி
எதிர்பார்ப்பு:A/L
தொ.இ: B/6323

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 RC
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6336

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 5.4
தகைமை/தொழில்:HNDM, Dip in English Teacher
தொ.இ: G/6337

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 28 செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:பயிற்சி மருந்தாளர்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்
தொ.இ: G/6339

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 1
கி.பா.: செவ் 1 இல்
உயரம்:156cm
தகைமை/தொழில்:A/L அரச தொழில்
தொ.இ: G/6341

# கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 2215434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

# தவறிழைத்த சாரதிகளிடமிருந்து ஒன்பது மாதங்களில் 28 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா அரசிற்கு வருமானம்

## மாங்குளம் பொலிஸ் நிலைய வீதிப்போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மாங்குளம் பொலிஸ் பிரிவில் கடந்த 9 மாதங்களில் தவறிழைத்த சாரதிகளிடம் அறவிடப்பட்ட தண்டப்பணத்தினூடாக 2,826,150 ரூபா அரசிற்கு வருமானமாக கிடைத்துள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலைய வீதிப்போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில் பொலிஸாரின் வீதிப்பாதுகாப்பு நடவடிக்கையை அதிகரித்து வருவதாகவும் ஆனால் சாரதிகளின் அசமந்தப் போக்கினாலேயே அதிக விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சாரதிகள் மிகுந்த அக்கறையுடன் செயற்படுமாறும் பயணத்தை ஆரம்பித்தவுடன் அதிகவேகமாக வீடு சென்று சேரவேண்டும் என்ற எண்ணமும் நித்திரையை பொருட்படுத்தாது பயணத்திலீடுபடுவது உள்ளிட்டமையும் அதிகமாக மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்களில் சிக்குவதாகவும் மோட்டார் சைக்கிளை செலுத்துபவர்கள் வீதி ஒழுங்குகளை சரிவர கடைப்பிடிக்காமையுமே பல விபத்துக்களில் சிக்க காரணமாக அமைகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

இதனைவிட தமது வாழ்க்கையை கூட கருத்திலெடுக்காது வீதி விதிமுறையை மீறுபவர்களை திருத்தும் முகமாகவே தாம் தண்டப்பணம் அறவிடுவதாகவும் இதனடிப்படையில் கடந்த 9 மாத காலத்தில் தண்டப்பணமாக 2,826,150 ரூபா அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏ-9 வீதியில் 24 கிலோமீற்றர் தூரத்தினையும் மாங்குளம் - மல்லாவி வீதியில் 15 கிலோமீற்றர் தூரத்தையும் மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் 15 கிலோமீற்றர் தூரத்தையும் நிர்வகித்து வரும் மாங்குளம் பொலிஸார் அதிகவேகத்தில் பயணம் செய்பவர்களை குறைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதையும் வீதிப் போக்குவரத்து பொலிஸார் பலர் கடமையில் ஈடுபட்டு வருகின்றமையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

## தோணிக்கல் காந்தி வீதியை செப்பனிட்டுத் தாருங்கள்

(குருமன்காடு)


வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட தோணிக்கல் கிராமத்தில் உள்ள காந்தி வீதியை திருத்தித்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து பல வருடங்களாகியும் இவ்வீதி திருத்தப்படாத நிலையில் உள்ளது. இவ்வீதி மேடு பள்ளமாக காணப்படுவதனால் பயணம் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் பயணம் மேற்கொள்பவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிக்க முடியாத நிலையில் இருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மழைக்கு முன்னர் விரைந்து நடவடிக்கை எடுத்து வீதியை முழுமையாக திருத்தித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை தோணிக்கல் அதிசய விநாயகர் கோயில் முன் வீதி, சிவன் கோவில் வீதி ஆலடி வீதி என கிராமத்தின் பல வீதிகள் தார் வீதியாக காணப்பட்ட போதும் அவை குண்டும் குழியுமாக காணப்படுவதாகவும் இதனால் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. எனவே அதனை சீர்திருத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தினுள் குரங்குகள் அட்டகாசம்



(பனிகன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் குடிநீர் கலன்களில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதால் நீர் அசுத்தமடையும் நிலை காணப்படுவதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வைத்தியசாலைக்குள் நீர் தேங்கி நின்று நுளம்பு பெருகக்கூடிய நிலையிலிருந்தும் அவற்றை கவனிப்பாரற்று விட்டுள்ளதாக நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை வைத்தியசாலையினுடைய நுழைவுப் பகுதியில் போடப்பட்டுள்ள லெவல் சீட் எப்போதும் நோயாளர்களின் தலையில் விழக்கூடிய ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் கால் நடைகள் வைத்தியசாலை வளாகத்திற்குள் நடமாடி திரிவதாகவும் பல ஊழியர்கள் கடமையிலிருந்தும் இவற்றை கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனையளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுத்தமான இடமாக காணப்பட வேண்டிய வைத்தியசாலை வளாகம் இவ்வாறு காணப்படுவதற்கு சமூக ஆர்வலர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளதோடு இந்த வைத்தியசாலையை சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர். (2-281)




## முல்லை.தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான சந்திப்பு இன்று

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நிரந்தர வழியனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான சந்திப்பொன்று இன்று பிற்பகல் 12.30 மணிக்கு சிலாவத்தை பொதுக்கூட்ட மண்டபத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பேருந்து உரிமையாளர்கள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தற்காலிக வழியனுமதிப்பத்திரங்கள் ஊடாகவே பேருந்து சேவையை நடத்தி வருகின்றார்கள்.

இதனால் இவர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு வாழ்கிறார்கள். உரிமையாளர்களின் பொருளாதார சுமையை குறைப்பதற்காக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் உரிமையாளர்களுக்கு நிரந்தர வழியனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைசெய்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக சென்ற 16.09.2016 அன்று கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களை மன்னார் நகரசபை மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடி அவர்களுக்கான நிரந்தர வழியனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினூடாக தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இரண்டாம் கட்டமாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நிரந்தர வழியனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான சந்திப்பொன்று இன்று பிற்பகல் 12.30 மணிக்கு சிலாவத்தை பொதுக்கூட்ட மண்டபத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (2)

## முல்லைத்தீவு கரையோரத்தில் வெளிச்சவீடு இன்மையால் மீனவர்கள் கரைசேர்வதில் அவதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் வெளிச்சவீடு அமைக்கப்படாமையால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ள மீனவ அமைப்புக்கள், வெளிச்சவீடு ஒன்றினை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 212 வரையான மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன், 5 ஆயிரத்து 60 வரையான கடற்றொழிலாளர்கள் கடற்றொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இப்பகுதியில் வெளிச்சவீடு ஒன்று இன்மையால் கடற்றொழிலாளர்கள் இரவுவேளைகளில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் வெளிச்சவீடு ஒன்றை அமைக்குமாறும் மீனவ அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த மாதம் கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன்,

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் வெளிச்சவீடு ஒன்று இல்லை. இதனை அமைக்க வேண்டும். இது இல்லாததால் சகல மீனவர்களுக்கும் திசை காட்டிகளை வழங்க வேண்டியுள்ளது.

அத்துடன், 4 படகு நிறுத்தும் இடங்கள், 20 இடங்களில் இறங்கு துறைகள், குளிரூட்டப்படக்கூடிய வசதிகொண்ட குளிரூட்டிகள், 220 வரையான திசை காட்டிகள், மீனவர்களுக்கு துறைமுகம் ஒன்று என்பன அமைக்கப்பட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை சந்தேகத்தின் பேரில் இருவர் கைது

### புளியம்பொக்கணை பெரியகுளம் பகுதியில் சம்பவம்

(பரந்தன்)

புளியம்பொக்கணை பெரிய குளம் பகுதியில் இரகசியமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸ் விசேட குழுவினரின் முற்றுகைக்கு உள்ளானது.

இதன்போது 31 போத்தல் கசிப்பு, ஒரு பரலில் இருந்து 240 போத்தல்கள் கோடா, கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் என்பன பொலிஸாரினால் புளியம்பொக்கணை சுண்டிக்குளம் களப்பு பகுதியில் மீட்கப்பட்டுள்ளதுடன் இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன விசேட குழுவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த குழுவினர் அப்பகுதிக்கு சென்று முற்றுகையிட்டதை அடுத்து மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டன.



மீட்கப்பட்ட பொருட்கள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-312)

# கல் அகழ்வும் காடழிப்புமே கிணறுகள் நீரின்றி வற்றியமைக்கு காரணமாகும்

## சின்னச்சாளம்பன் மக்கள் ஆதங்கம்

(பனிக்கன்குளாம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்கள் வரட்சியினால் நீரின்றி பெரும் அவதிப்படுகின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வழங்கப்பட்ட அனுமதிகளுக்கு முரணாக சட்டவிரோதமாக இடம்பெறும் கல்கைழ்வும் காடழிப்புமே தமது அவல நிலைக்குக் காரணம் என சின்னச்சாளம்பன் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்.

ஒட்டுசுட்டானில் அனுமதிக்கு முரணாக இடம்பெறும் கருங்கல் அகழ்வு 170 அடி தாழம் வரை இடம்பெற்றுள்ளது.

இதனால் அந்த குழிகளில் தேவையான நீர் இருப்பதாகவும் ஆனால் தமது கிணறுகள் எல்லாம் வற்றி நீரின்றி காணப்படுவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு சட்டத்திற்கு முரணாக இடம்பெறும் வேலைகளை நிறுத்த வேண்டிய அதிகாரிகள் ஏன் மௌனமாக இருக்கிறார்கள் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதனைவிட எமது பகுதியிலும் எமது பகுதிக்கு அண்மையிலும் அபிவிருத்தி என்கின்ற பெயரில் பல்லாயிரக்கணக்கில் தேக்க மரங்கள் வெட்டப்பட்டு அதனோடு இணைந்த காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனைவிட காடழிப்பு மிகத்துரிதமாக இடம்பெற்று வருகிறது.

இதனால் மழைவீழ்ச்சி இல்லாது போயுள்ளது. மழைபெய்கின்ற காலப்பகுதி வந்தும் இதுவரை மழையில்லை. இந்நிலைமை தொடர்ந்தால் நம் நிலை என்ன என கேள்வி யெழுப்பியுள்ளனர். (2-281)




# இரு வெவ்வேறு சுற்றிவளைப்பு; மூன்று சந்தேக நபர்கள் கைது

## தடயப்பொருட்களும் மீட்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட மாங்குளம்,வெலிஓயா ஆகிய பொலிஸ் நிலையங்களில் இரு வெவ்வேறு சுற்றிவளைப்புக்களில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தடயப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி வழிநடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போது மாங்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள கிழவன் குளம் கிராமத்தின் ஊடாகச் செல்லும் கனகராயன் ஆற்றுப்பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிப் பயணித்த இரண்டு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் வெலிஓயா ஜனகபுரம் கிராமத்தில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் 5 கிராம் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

மேற்படி இரு சம்பவங்களின் போதும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களையும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மூவரையும் மாங்குளம், வெலிஓயா ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# தேசிய உள்ளூராட்சி மாதம்; வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

தேசிய உள்ளூராட்சி மாதம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நாடு தழுவிய ரீதியில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள மாந்தை கிழக்கு பிரதேச சபையும் பல்வேறு விதமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் பரீஸ்கர மூர்த்தி சிவபாலராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தேசிய உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீட்டுமதில் அமைத்தல், கேற் அமைத்தல் மற்றும் கட்டடங்கள் அமைத்தல் என்பன தொடர்பான பிரதேச சபையின் சட்ட விதிகளையும் மற்றும் சுகாதாரம், நூலகம் ஆகியவற்றின் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், வீதி நாடகங்கள் என்பனவற்றின் ஊடாக விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் இறுதி நிகழ்வாக எதிர்வரும் 24,25,26,27 ஆகிய நான்கு திகதிகளிலும் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் 10 ஓவர் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டி, கரும்புள்ளியான் இருதயநாதர் வினையாட்டு மைதானத்தில் தினசரி பிற்பகல் 2.30 மணி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறும்.

உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட அனைத்து வகையான போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேசசபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# பெருங்கடலையும் நந்திக் கடலையும் இணைக்கும் முகத்துவாரம் மணல் அணையை உடைத்து பெருங்கடல் நீருடன் கலப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு நந்திக்கடலினுள் முல்லைத்தீவு பெரும் கடல் மணல் அணையை உடைத்து உள்நுழைந்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு நகரப்பகுதியை அண்மித்துள்ள வட்டுவாகல் நந்திக்கடல் நீரேரியானது தற்போது நிலவும் வரட்சி காரணமாக நீர் வற்றி குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

ஆயினும் காலநிலை மாற்றத்தினால் முல்லைத்தீவு பெரும் கடலின் நீர் மட்டம் உயர்வடைந்து காணப்படுகின்றது.

இந் நிலையில் பெரும் கடலையும் நந்திக்கடலையும் இணைக்கும் முகத்துவாரம் பகுதியிலுள்ள மணல் அணையை உடைத்துக் கொண்டு பெருங்கடல் நீர் உள்நுழைந்துள்ளது.

நள்ளிரவில் இருந்து மறுநாள் காலை வரை நந்திக்கடலினுள் உட்பிரவேசிக்கும் பெருங்கடல் நீர் கால நிலைமாற்றத்தினால் மீளவும் மாலை வேளைகளில் குறைந்தளவு நீர் கடலினுள் சென்று கலக்கின்றது.

இவ்வாறு சுழற்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது. (2-15)

# வரட்சியான காலநிலை காரணமாக குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு தூர இடம் செல்லவேண்டியுள்ளது

## கோணாவில்,அறிவியல் நகர் மக்கள் அவதி

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள கோணாவில் பகுதியிலுள்ள மக்கள். தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக தமக்கான குடிநீர் பெறுக்கொள்ள முடியாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழுள்ள கோணாவில். அறிவியல் நகர். உருத்திரபுரம். செருக்கன் ஆகிய பகுதிகளில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கோணாவில் கிழக்கு பகுதியில் சுமார் 240 குடும்பங்கள். தமக்கான குடிநீரைப் பெறுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு மிக நீண்ட தூரத்துக்குச் செல்ல வேண்டியுள்ளதுடன். மீள் குடியேற்றத்தின் பின்னர் அமைக்கப்பட்ட பொதுக்கிணறுகள். தண்ணீரின்றிக் காணப்படுகின்றன" என மக்கள் தெரிவிக்கின்றனர்.

"எமக்கான குடிநீரை வழங்குமாறும் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை என்பவற்றிடம் கோரிக்கை விடுத்த போதும். இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை" எனவும் அந்த மக்கள் குறிப்பிடுகின்றனர்.

எதிர்காலத்தில் நீர்த்தாங்கியொன்றை அமைத்து அதன்மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை உறுதியளித்துள்ளது. எனினும், தற்போது நாம் எதிர்கொள்ளும் குடிநீர் பிரச்சினை தொடர்பில் எவரும் அக்கறை செலுத்தவில்லை" என இப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (2-281)

# மக்கள் பயனடைந்த இலவச மருத்துவ முகாம்

(மல்லாவி)

தென்னிந்திய திருச்சபையின் நிறைவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் 12 ஆவது இலவச மருத்துவ முகாம் அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது. தென்னிந்திய திருச்சபையின் பேராயரின் துணைவியாரும். நிறைவாழ்வு மைய இயக்குநருமான டாக்டர் தயாளினி தியாகராஜா தலைமையிலான மருத்துவ குழுவினரினால் கிளிநொச்சி கண்ணகிநகர் அம்பிகை வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த மருத்துவ முகாமின் சிறுவர். பெண்கள் உள்ளிட்டவர்களுக்கான மருத்துவம் இடம்பெற்றதுடன். வெளிநோயாளர்களுக்கான சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

இதன்மூலம் சுமார் 200 இற்கு மேற்பட்ட மக்கள் பயன்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# அறிவொளி வளையத்தினால் ஊற்றுப்புலம் மக்களுக்கு குழாய்க்கிணறு அமைப்பு



(சோலைநகர்)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் வள்ளுவர் பண்ணை மக்களுக்கு அண்மையில் அறிவொளி வளையத்தின் ஏற்பாட்டில் புதிதாக குழாய்க்கிணறு அமைத்து நீர் பெற்றுக் கொள்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகபுதிதாக குடியேறிய வள்ளுவர் பண்ணை மக்களும் ஊற்றுப்புலம் கிராமத்தில் வசிக்கும் பெரும்பாலான குடும்பங்களும் நீண்ட தூரம் சென்று பொதுக் கிணறுகளில் நீர் பெற்று வந்த போதும் கிணறுகளில் நீர் வற்றி வரட்சி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அறிவொளிவளையத்தினர் முன்வந்து இவ் உதவியினை மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

அத்தோடு 60 குடும்பங்கள் வரை இக் குழாய்க் கிணற்று நீர் பெறுகின்ற நிலை ஏற்பட்டுள்ளதால் இன்னும் ஓரிரண்டு குழாய்க்கிணறுகள் அமைத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவொளி வளையத்தின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவநேசன் தெரிவித்துள்ளார். (2-309)

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை மிகவும் நெருங்கிவிட்டது

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு) — மனித உரிமைகள் பற்றிய கரிசனைகளால் 2010 ஆம் ஆண்டு பறிக்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை மீளப் பெறுகின்ற கட்டத்தை நெருங்கி விட்டதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் டொனல்ட் டஸ்க் தெரிவித்துள்ளார்.



பிரசெல்ஸ்"க்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அராஜகம், சர்வாதிகாரத்தில் இருந்து விடுபட்டு நல்லாட்சியை உறுதிப்படுத்துவதை நோக்கி இலங்கை முன்னகர்வதையிட்டு ஐரோப்பிய ஒன்றியம் மகிழ்ச்சியடைவதாகவும், அதன் தலைவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீள வழங்குவதற்கு தாம் ஆதரவு அளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் டொனல்ட் டஸ்க் தனது டுவிட்டர் பதிவில், இலங்கையில் நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தை முன்னேற்றுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவளிக்கும் என்றும், இலங்கையுடன் இருதரப்பு மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தலைவரை இலங்கைக்கு வருமாறும் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள டொனல்ட் டஸ்க் அடுத்த ஆண்டு கொழும்பு வருவதாக உறுதியளித்தார். (இ-7-10)

# துறைமுக நகரத்திட்டத்தால் மீனவருக்கு பெரும் பாதிப்பு



கொழும்பு துறைமுக நகர திட்டத்தால் பாதிக்கப்படும் மீனவர் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கொழும்பு துறைமுக நகரின் நிர்மாணப் பணிகளுக்காக நீர்கொழும்பு மற்றும் திக்கோவிட்ட ஆகிய பகுதிகளில் மணல் அகழப்படுகிறது. இதனால் கரையோரப் பகுதிகளில் ஏற்படும் பாரிய சூழல் சேதம் பற்றி மீனவ அமைப்புக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் செயற்பாட்டால் மீன்களின் இனப்பெருக்கத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலை குறித்து நான் மிகவும் கவலைப்படுகின்றேன். கரையோரப் பகுதிகள் ஏற்கனவே மீன்கள் முட்டையிடும் பகுதிகளாக உள்ளன. இவ்வாறு மணல் அகழப்படுவதால் கடுமையாக சூழல் பாதிக்கப்படுவதோடு மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

இந்நிலை குறித்து ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் இவ்வேண்டுகோளை முன்வைக்கின்றேன். இவ்விடயத்தை மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட மீனவர்களோடு உரையாட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

தென்கொழும்பு பகுதிகளில் மண்ணரிப்பு ஏற்படுவதை ஏற்கனவே நான் தெரிவித்திருந்தேன். இதற்கிணங்க பாதிக்கப்பட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் அதிகாரிகளோடு இணைந்து கலந்துரையாடவும் அழைப்பு விடுக்கின்றேன்.

சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து ஆய்வு செய்யாமல் முன்னைய அரசினால் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தாமதிக்காமல் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் தனதறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இராணுவப் புலனாய்வாளர் தற்கொலை; தொலைபேசி மூலம் முக்கிய தகவல்கள்

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை தானே கொலை செய்ததாக கடிதம் ஒன்றினை எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துகொண்ட இராணுவத்தின் சார்ஜன் மேஜர் தர ஓய்வுபெற்ற இராணுவ புலனாய்வு வீரரின் கையடக்கத் தொலைபேசி இலக்கம் ஊடாக மேலதிக விசாரணைகளுக்கான மிக முக்கியமான தகவல்கள் சில குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கண்டறியப்பட்டுள்ளன.

அவர் நெருங்கிப் பழகிய மற்றும் தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பிலான தகவல்களை மையப்படுத்தியே இந்த சந்தேகிக்கத்தக்க விசாரணைக்குரிய தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு பொலிஸ் குழு கண்டறிந்துள்ளது. இந் நிலையில் அந்த தகவல்களை மையப்படுத்தி குற்றப் புலனாய்வுப் பிரிவும் தேசிய உளவுப் பிரிவும் தனித்தனியான சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இராணுவ சார்ஜன்மேஜர் தற்கொலை செய்து கொள்வதற்கு இரு தினங்களுக்கு முன்னர் அதாவது, கடந்த 11 ஆம் திகதி கேகாலையில் இருந்து கொழும்புக்கு வந்துள்ள நிலையில் மீள வீட்டுக்கு இரவு 7 மணியளவிலேயே திரும்பியுள்ளார். இந் நிலையில் கொழும்பில் அவர் சந்தித்தவர்கள் யார், எதற்காக சந்தித்தார், எங்கு தங்கியிருந்தார்? உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தி புலனாய்வுப் பிரிவின் சிறப்பு பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

கேகாலையில் தங்கியிருந்தவாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு, தேசிய உளவுப் பிரிவு, பொலிஸ் விசேட நடவடிக்கை பிரிவு ஆகியவற்றின் தலா ஒவ்வொரு குழுக்களும் கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரின் கீழ் விசேட பொலிஸ் அணியொன்றும் விசாரணைகளை தொடர்கின்றன. இதற்கு மேலதிகமாகவே கொழும்பில் பிரத்தியேக விசாரணைக்குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.

54 வயதான ஓய்வுபெற்ற புலனாய்வு சார்ஜன் மேஜருக்கு ஏதேனும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் வந்தனவா எனவும், அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மலிந்த உடலாகம என்பவர் யார் என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனைவிட தற்கொலை செய்துகொண்ட இராணுவ மேஜரின் மகன் மரண பரிசோதனைகளின் போது வழங்கிய சாட்சியில், கடிதத்தின் கையெழுத்து, தனது அப்பாவினுடையது என குறிப்பிட்டுள்ள நிலையில் அது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்கொலை செய்துகொண்ட எதிரிசிங்க ஜயமான்ன என்ற குறித்த இராணுவ வீரரின் பெயருக்கு பதிலாக போலி பெயரில் அவர் இராணுவத்திடமிருந்து ஓய்வூதிய பணத்துக்கு மேலதிகமாக இரகசிய கணக்கில் இருந்து பணம் பெற்று வந்ததாக கூறப்படும் விவகாரம் தொடர்பிலும் தற்கொலைக்கு முன்னைய வாரங்களில் தொடர்ச்சியாக இராணுவ முகாம்களுக்கு சென்று பலரை சந்தித்ததாக கூறப்படும் விவகாரம் தொடர்பிலும் விசாரணையாளர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

இது குறித்து பிரதான விசாரணையை குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் நாகஹமுல்ல ஆகியோரின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திசேரா, பொலிஸ் பரிசோதகர்களான நிஸாந்த சில்வா, சுதத் குமார ஆகியோரின் கீழான பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# 'கோத்தாவின் போர்' நூல் பிரபலமடையவில்லை

தாம் எதிர்பார்த்ததை போன்று கோத்தாவின் போர் என்ற நூல் பிரபலமடையவில்லை என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

இதனால் தாம் ஏமாற்றமடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

உலகில் யுத்தக்கால நிகழ்வுகள் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள் பல பிரபலமடைந்துள்ளன. அவற்றைப் போன்று எனது நூலும் பிரபலமடையும் என எதிர்பார்த்திருந்தேன்.

இதனைக்கொண்டே கோத்தாவின் போர் என்ற நூலும் வெளியிடப்பட்டது. எனினும், துரதிர்ஷ்டவசமாக அந்த நூல் பிரபலமடையவில்லை என அவர் கவலை வெளியிட்டுள்ளார். இதேவேளை, கோத்தாவின் போர் என்ற நூலை சந்திரபிரேம என்ற ஊடகவியலாளர் மூலம் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# ஐரோப்பிய ஒன்றியம் 210மில்லியன் யூரோ நிதியுதவி வழங்கும்



இலங்கையின் அபிவிருத்திக்கு 210 மில்லியன் யூரோ நிதியுதவி வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் உறுதி அளித்துள்ளது.

பிரசெல்ஸ்"க்குச் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான உயர் பிரதிநிதியும், ஐரோப்பிய ஆணையத்தின் உதவித் தலைவருமான பிடெரிக்கா மொகேரினியை சந்தித்துப் பேச்சு நடத்திய போதே ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

2020ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான அபிவிருத்தி நிதி உதவியாகவே, 210 மில்லியன் யூரோ (சுமார் 34 பில்லியன் ரூபா) வழங்கப்படவுள்ளது.

இது, 2007-2013 ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

நிலையான அபிவிருத்தி, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டத்தில் அறநெறி வழிகாட்டலின் முக்கியத்துவம்

அறிமுகம்

விரைவாக ஏற்பட்டுவரும் உலகியல் மாற்றங்கள், மனிதவாழ்வையும் மாற்றியமைக்கவே செய்கின்றது. இதனால் ஒவ்வொரு மனிதனும் தனது அன்றாட வாழ்வில் எண்ணற்ற சிக்கலுக்கும், முரண்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றான். எனவே வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும் எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும், சுயதிறன்களை விருத்தி செய்யவும், பொருத்தமான தெரிவுகளை செய்துகொள்ளவும், சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளவும், இன்றி வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

வழிகாட்டல் (Guidance) என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உறுதியான முடிவுகளை எடுப்பதற்கு அளிக்கப்படும் உதவி. (A.Morison) ஒருவன் தன்னைப் பற்றி உணர்ந்து கொள்ளுமாறு சுயவிளக்கம் பெறவும் (self realisation), தன்னை நெறிபடுத்தவும் ( Self Direction), தன்னை ஏற்றுக் கொள்ளவும் (Self Understanding) உளவியல் அடிப்படையில் பயிற்சி பெற்ற ஒருவரால் வழங்கப்படும் உதவியே வழிகாட்டல் எனப்படும் (Mathewson R.H)

வழிகாட்டல் சேவையின் வளர்ச்சியடைந்த ஓர் அம்சமாக அமைவதே ஆலோசனைச் சேவையாகும். இதனையே உள ஆற்றுப் படுத்தல், சீர்மியம் (Counselling) எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர்.

உள ஆற்றுப்படுத்துநர் ஒருவர் தன்னை நாடிவரும் துணைநாடுநருடன் குணமாக்கல் உறவில் ஈடுபட்டு அவர் தன் தேவைகளை பொருத்தமாக பூர்த்தி செய்யவும் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வளர்ச்சி தரும் முறையில் கையாளவும், ஆளுமையையும் உறவுகளையும் மேம்படுத்தவும் நெறிப்படுத்தலே உள ஆற்றுப்படுத்தல் அல்லது ஆலோசனை எனப்படும். (Stalin, R) இவ் வழிகாட்டல் ஆலோசனை ஓர் அங்கமாக அமையும் அறநெறி வழிகாட்டல் இன்றைய காலத்தின் முக்கிய தேவையாக உள்ளது. அறநெறி வழிகாட்டல் (Moral Guidance Service)

எல்லாச் சமயங்களும் மனிதனை நல்வழிப்படுத்த அறநெறிக்கும், ஆன்மீகத் திற்கும் முதலிடம் கொடுக்கின்றன. இலங்கைப்பாடசாலைகளில் சமயம் ஓர் கட்டாயப் பாடமாக அமைந்துள்ளமை அறநெறிவழிகாட்டலுக்கு அரிய சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. எனினும் இன்றைய தகவல் தொழில்நுட்ப விருத்தி காரணமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அறிவுப் பிரவாகத்தால் (Knowledge Explosion) தொடர்பாடல் சாதன வளர்ச்சி இன்றைய மனித வாழ்வை சிக்கல் நிறைந்ததாக மாற்றியுள்ளது.

இன்று பணம் ஈட்டுதலும், கட்டுப்பாடின்றிச் செலவு செய்தலும், மனம் போனவாறு தன்னுரிமையுள்ள வாழ்க்கை நடத்தலுமே வாழ்க்கைக் குறிக்கோளாக உள்ளன. இதனால் எவ்வழியேனும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி போட்டியும், பொறாமையும் மலிந்த சமுதாயமாக இவ்வுலக சமுதாயம் மாறிக் கொண்டு வருகின்றது. இயந்திரமயப் போக்கும் தவறான வாழ்க்கைக் குறிக்கோள்களும் மனித சமுதாயத்தில் அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ளன. இன்று எமது சமுதாயத்திலே முகிழ்ப்புப் பெற்றுள்ள சமூகச் சீர்கேடுகள், சமூக வன்முறைகள், கலாசார சீர்கேடுகள், குடும்பப் பிரச்சினைகள், சமவயதுக் குழுப் பிரச்சினைகள், கட்டிளமைப்பருவ பாலியல் சார் குழப்பங்கள், போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் எனப் பலவிதமான நெருக்கீடுகளால் பாதிக்கப்




பட்டுள்ள மாணவர்களுக்கு அறநெறி வழிகாட்டல் இன்று அவசியமாகின்றது.

சமய வாழ்வில் துலங்கிய அருளாளர்கள் மனிதகுலம் உய்யும் வழிநெறிகளை அருளியுள்ளனர். பக்திநெறி, அன்புநெறி, அருள் நெறி, அறநெறி எனதத்துவம் உரைத்தனர். எனினும் இத்தத்துவங்களையெல்லாம் மானிடர் உணர்ந்தனரல்லர். இப் பின்னணியிலே அறநெறி வழிகாட்டலின் தேவை அவசியமான ஒன்று எனக் கல்வியாளர்கள் உணர்ந்துள்ளனர். நற்பண்பின் இயல்புகளையும் உள்ளடக்கத்தையும் அறிந்து கொள்ளாமல் ஒருவன் நல்லவனாக இருக்க முடியாது. எனவேதான் எட்வேட் லின்ட்மன் (Edward Lindeman) என்பார் "அறப்போதனைக்குரிய ஆய்வு கூடங்களாகவும் பயிற்சிக் களங்களாகவும் பாடசாலைகள் விளங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

**அறநெறி வழிகாட்டலில் ஆசிரியரின் வகிபங்கு**

நற்சமுதாய உருவாக்கத்தில் ஆசிரியர் வகிபாகம் பிரதானமானது. அறநெறி வழிகாட்டல் என்பது ஆசிரியர் ஒவ்வொருவரதும் கடமையாகும். இதனடிப்படையில் ஆசிரியர்கள் அனைவருமே அறச்சார்புடையவர்களாக விளங்க வேண்டும்.



மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் ஆசிரியர்கள் (Teacher as a model) சிறந்த விழுமியங்களைப் பேணுபவராக, ஆசிரியர் ஒழுக்கக் கோவையை மதித்து நடப்பவராக செயற்பட வேண்டும். அத்துடன் கல்வியூட்டுவோர் ஆசிரியர்களே என்ற வகையில் அறவளர்ச்சிக்குதவும் முக்கிய கூறுகளை அவர்கள் மீளாய்வு செய்ய வேண்டும். பாடப்பொருட்கூறுகள் மூலம் போதிக்கப்படும் ஓர் ஒழுக்கத்தின் (Discipline) உள்ளடக்கத்தை ஆசிரியர் நன்கு விளங்கிக் கொண்டு போதிப்பின் சிறப்புப் படமாக அறப்போதனை அவசியமில்லை. எனவே ஆசிரியர்கள் நற்சமுதாய உருவாக்கத்தில் தனது வகிபங்கினை உணர்ந்து செயற்பட வேண்டும்.

**ஆதார அறப்போதனைகளின் முக்கியத்துவம்**

அறநெறி வழிகாட்டலில் ஆதார அறப்போதனைகள் முக்கியமானவை. இவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த அறப்பண்புகள் பின்வருமாறு.

- மனிதனை மனிதனாக மதித்தல்
- சேவையின் மகத்துவத்தை போற்றுதல்
- நன்மை தீமைகளைப் பிரித்தறிதல்
- கடமை சொந்தப் பொறுப்புணர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தல்
- பணிபுரிதலின் முக்கியத்துவத்தை உணர்தல்
- நல்ல வினைத்திறனை நாடுதல்
- விழுமியங்களுக்கு மதிப்பளித்தல்
- பண்டப் பேற்றின் முக்கியத்துவத்தினைப் பேணுதல்
- நேர்மையாகச் செயற்படல்
- தெளிவான செய்திப் பரிமாற்றம்

இவையாவும் மாணவரிடையே அறப்பண்பை வளர்ப்பதற்கு துணை செய்யும்.

அறப்பண்பை பிள்ளைகளிடத்தே விருத்தி செய்யும் போது நுண்மதி ஆற்றலும், தர்க்க நோக்கும் நியாயம் காணவிளையும் நாட்டமும் அவர்களிடத்து வளர்க்கப்படும் மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தலிலும் உணர்ச்சிகளுக்கு வடிகால் அமைத்தலிலும், அறப்பண்பு செல்வாக்குச் செலுத்துகின்றது. அறப்பண்பின் விருத்தியே தரமான கல்வியின் தேடலுக்கும் தரமான செயற்பாடுகளுக்கும். வழிவகுக்கும். எதிர்கால சமுதாயம் தரமானதாக அமைய தரமான தாக அமைய தரமான கல்விச் செயற்பாடுகள் மூலமே சாத்தியமாகும் என்பதால் அறநெறி வழிகாட்டலே இவை யாவற்றுக்கும் அடிப்படையாக அமையும்.

**அறப்பண்பு வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

அறப்பண்பு வளர்ச்சியில் பல காரணிகளின் செல்வாக்கு காணப்படினும் உறவு முறைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக உள்ளன. பெற்றோர், ஆசிரியர்கள், சகமாணவர்கள், சமூகத் திலுள்ளோர் என பல்வேறு தரப்பினருடன் பிள்ளை கொள்ளும் உறவு அறப்பண்பு வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்துகின்றது. அதேவேளை பல்வேறு கலாசாரப் பின்னணியிலிருந்து வரும் பிள்ளைகள் சங்கமிக்கும் இடமாகவும் இன்று பாடசாலைகள் விளங்குவதால் கலாசாரமும் அறப்பண்பு வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்குகின்றது. எனவே சிறந்த அறப்பண்பை மாணவர் அனைவரிடமும் வளர்க்கக்கூடிய பொதுவான பாடசாலைக் கலாசாரமொன்றை நாம் பாடசாலையில் கட்டியெழுப்ப வேண்டும். ஆரோக்கியமான பாடசாலைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் நலன்விரும்பிகள் என பாடசாலையின் பல்வேறு பிரதான பொறுப்புதாரர்களும் (Stakeholders) தங்கள் பங்களிப்பை நல்க வேண்டும்.

பாடசாலையில் தினமும் நடைபெறும் காலை ஒன்றுகூடலின் போதும் விழாக்களின் போதும் அதிபர், ஆசிரியர்கள், மாணவத்தலைவர்கள் அறக் கருத்துக்களை எடுத்தியம்பும் நன்னெறிக் கதைகள்,குறுகிய படக்காட்சிகள் (Short movie), அறநெறி வழிநின்றோரின் வாழ்க்கை அனுபவங்கள் என்பவற்றை மாணவர் களுக்குக் கூறுவதன் மூலம் அவர்களின் மனப்பாங்கில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

முடிவுரை :-

மாதா, பிதா, குரு தெய்வம் என்ற வரிசையில் குருவுக்கு அளிக்கப்பட்டு வந்த பக்தி, நிலை இன்றைய காலகட்டத்தில் சீர்குலைந்து வருவது யாவரும் அறிந்ததே. கிராமத்தில் வாத்தியார் என்றால் அவருக்கு என்று தனி மரியாதை இருந்தது. அறிவுரை வழங்குவோராக, இளைஞர்களுக்கு வழிகாட்டுபவராக, பிரச்சினைகளைத் தீர்ப்பவராக, தலைமை தாங்குபவராக பல வகிபாகங்களை ஏற்று நன்மதிப்பை பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். ஆனால் இன்றைய சமூகத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் "ஏறிய ஏணியை எட்டி உதைக்கும் மாணவர் பரம்பரையை உருவாக்குவதாக அமைந்துவிடுகிறது.

எனவே ஆசிரியர்கள் அனைவரும் மாறிவரும் உலகில் மாணவர் மனங்களை வென்றிட நன்கு திட்டமிட்டு ஆரோக்கியமான வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்க வேண்டியது காலத்தின் கட்டாய பணியாகின்றது.

சட்டங்களின் மத்தியில் சேவை புரிவோராக ஆசிரியப்பணி மாறியுள்ளது. இத்தகைய மாற்றங்களை மனதில் கொண்டு நற்சமூகத்தை உருவாக்குவதில் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

எனவே இன்றைய தகவல் தொழில்நுட்பயுகத்திலே கூட்டிணைந்து கற்கும் சமுதாயமாக (Collaborative Learning Society) பாடசாலைகள் உருவகிக்கப்படுகின்றது. பாடசாலைக்கான இந்த உருவகமானது பாடசாலையை மையமாகக் கொண்டு நற்சமுதாயம் உருவாக்கம் பெற முடியும் என்பதையே சுட்டி நிற்கின்றது. இதனை நன்குணர்ந்து பாடசாலைகளில் அறநெறி வழிகாட்டலை சிறப்புற மேற்கொண்டு ஆதார அறப்போதனைகளை பிள்ளைகளிடத்தே விதைக்கும் போது இலட்சியமான ஓர் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

திருமதி. த. தயாபரன்
ஆசிரியர், யா/ கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்.

# ட்ரம்ப் புலம்புவதை நிறுத்தவேண்டும்

## ஒபாமா அறிவுரை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் நேரத்தில் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு ட்ரம்ப் ஏதேதோ பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாம் என ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவுரை வழங்கியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 8 ஆம் திகதி நடக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 19 நாட்களே இருப்பதால் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுக்கு ஆதரவாக ஜனாதிபதி பராக் ஒபாமா பிரசாரம் செய்து வருகிறார்.

இதற்கிடையே நேற்று முன்தினம் வோஷிங்டன் வெள்ளை மாளிகைக்கு வருகை தந்த இத்தாலி பிரதமர் மட்டியோ ரென்ஸியை ஒபாமா சந்தித்தார். அதை தொடர்ந்து அங்குள்ள ரோஜா தோட்டத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவிட்டது. இந்த நேரத்தில் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு ட்ரம்ப் ஏதேதோ புலம்பி வருகிறார். முன்பு எப்போதும் இல்லாத வகையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை போலியாக புகழ்ந்து வருகிறார்.

ஜனாதிபதியாக தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் பதவி ஏற்கும் முன்பு ரஷ்யா செல்ல விரும்புவதாகவும், புடினின் கொள்கைகளை முன்மாதிரியாக ஏற்றுக்கொள்வதாகவும் அவர் பேசி வருகிறார். தேர்தல் நெருங்கும் நேரத்தில் ஏதேதோ பேசி டிரம்ப் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என ஒபாமா மேலும் தெரிவித்தார். (இ-7)

# குற்றவாளிக் கும்பலுடன் ஹிலாரி; ட்ரம்ப் பரபரப்புக் குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்காக குற்றவாளிகளுடன் இணைந்து ஹிலாரி கிளின்டன் செயற்பட்டு வருவதாக டொனால்டு ட்ரம்ப் குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டனும், குடியரசு கட்சி சார்பில் டொனால்டு ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

டொனால்டுக்கு எதிராக பெண்கள் பலர் பாலியல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். இதனை தனக்கு சாதகமாக ஹிலாரி



பயன்படுத்தி பிரசாரம் செய்து வருகிறார்.

இந்நிலையில் ஹிலாரிக்கு எதிராக ட்ரம்ப் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். தேர்தலுக்காக ஹிலாரி குற்றவாளிக் கும்பலுடன் சேர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதாக டொனால்டு ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய டொனால்டு ட்ரம்ப், "குற்றவாளிகளுடன் இணைந்து தனது சொந்த ஆதாயத்துக்காக அமெரிக்க அரசை ஒரு வாகனமாக ஹிலாரி பயன்படுத்த முயலுகிறார்.

தேர்தலில் சூழ்ச்சியை உருவாக்க முயற்சிக்கும் அவருக்கு ஆதரவாக ஊடகங்களும் வாக்காளர்கள் மனதில் நஞ்சை கலக்கின்றன. பொய்யான கட்டுக்கதைகளுக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. இது போன்ற அனைத்து சூழ்ச்சி நடவடிக்கைகளுக்கும் நவம்பர் 8 ஆம் திகதி மக்கள் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்" என்றார். (இ-7)

# படகு விபத்தில் 32 பேர் பலி!

## 60 பேரைக் காணவில்லை



வடமேற்கு மியன்மாரில் படகு விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 32 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, மேலும் பலர் காணாமற்போயுள்ளதாக மீட்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளனர்.

சகயிங் பிராந்தியத்தில் சிந்த்வின் ஆற்றில் பயணித்த படகு கடந்த சனிக்கிழமை மூழ்கி விபத்திற்குள்ளானது. அதில் 150 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்ட நிலையில், ஏனையோரை தேடும் பணிகள் தொடர்ந்து வந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை வரை 32 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் அறுபதிற்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹோமலின் பகுதியிலிருந்து மொனிவா பகுதி நோக்கி பயணித்த படகே இவ்வாறு விபத்திற்குள்ளாகி உள்ளது.

மியன்மாரின் முன்னாள் தலைநகரான மாண்டலேயிலிருந்து 137 கிலோமீற்றர் தொலைவிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

படகுகளில் அளவுக்கு அதிகமான மக்களை ஏற்றி செல்வதால் படகு விபத்துகள் இந்தோனேஷியாவில் சாதாரணமாகும்.

கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற படகு விபத்தொன்றில் 64 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 21 ஆவது தடவையாக சீனாவை தாக்கிய தைபூன்

(பீஜிங்)

சீனாவில் இந்த ஆண்டு 21 ஆவது தடவையாக தைபூன் சூறாவளி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஹைனன் மாகாணத்தை ஊடறுத்துள்ளது.

மிகவும் சக்திவாய்ந்த சாரிகா தைபூன் சூறாவளியானது ஹைனன் மாகாணத்தின் பல பகுதிகளிலும் பெரும் நாசத்தினை தோற்றுவித்துள்ளது.

குறித்த சூறாவளியானது மணிக்கு 162 கிலோமீற்றர் வேகத்தில் வீசியதுடன், ஹிலீ மற்றும் வானிங் நகரங்களில் மண்சரிவினையும், ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூர் நேரப்படி காலை 9.50 அளவில் சாரிகா தைபூன் சூறாவளியின் தாக்கம் ஆரம்பமானதாக மாகாண வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பொழிந்ததாகவும், கடும்காற்று வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், நேற்று முன்தினம் மாத்திரம் 300 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அனர்த்தம் காரணமாக அம்மாகாணத்தில் வசித்த சுமார் 5 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வேறு இடங்களுக்கு நகர்த்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# மொசூலில் நேற்றும் பாரிய மோதல்!

## நெருக்கடிக்குள் தீவிரவாதிகள்



ஈராக்கின் மொசூல் நகரில் இடம்பெற்றுவரும் தாக்குதல்களில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதாக, அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக அந்நாட்டு அரச படைகள் மூன்றாவது நாளாக நேற்று புதன்கிழமையும் முன்னெடுத்த யுத்தத்தினால் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள தீவிரவாதிகள் அங்குள்ள மக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தி அங்கிருந்து வெளியேற முயற்சிக்கின்றனர்.

மொசூலைப் பொறுத்தவரை சுமார் 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு வாழ்ந்து வருவதாகவும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் நிலைகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இது தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள அமெரிக்க தரப்பு, பொதுமக்களை மோதல்களுக்கு பயன்படுத்துவதற்கு தமது கண்டனங்களையும் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க ஆதரவுப்படையினர் தீவிரவாதிகளுக்கு எதிராக முன்னெடுத்த தாக்குதல்களின் பயனாக இதுவரை சுமார் 10 கிராமங்களில் இருந்து தீவிரவாதிகள் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும், கிழக்கில் இருந்தும் தெற்கில் இருந்தும் இரு முனைத் தாக்குதல்களில் தீவிரவாதிகள் நெருக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும், மொசூலின் Qaraqosh நகரம் அரச படையினால் மீட்கப்பட்டதாக தகவல்கள் வெளியான போதிலும் பின்னர் படைத் தளபதிகளால் அதற்கு மறுப்பு வெளியிடப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (இ-7-10)

# 8ஆவது பிரிக்ஸ் மாநாடு சீனாவின் 'ரொமான்ட்டிக்' நகரில் நடைபெறும்

(பீஜிங்)

8 ஆவது பிரிக்ஸ் மாநாடு அடுத்த ஆண்டு சீனாவின் 'ரொமான்ட்டிக்' நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளை உள்ளடக்கிய 'பிரிக்ஸ்' அமைப்பின் உச்சி மாநாடு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

மாநாடு நடைபெறும் இடங்கள் இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் விருப்பப்படி, சுழற்சி முறையில் தேர்வு செய்யப்படுகின்றன. அந்த வகையில், கடந்த 2015 ஆம் ஆண்டு பிரிக்ஸ் உச்சி மாநாடு ரஷ்யாவில் உள்ள உஃபா நகரில் நடைபெற்றது.

பிரிக்ஸ் நாடுகளின் பட்டியலில் அகரவரிசைப்படி இடம்பெற்றுள்ள இந்தியா இந்த ஆண்டின் பிரிக்ஸ் உச்சி மாநாட்டை கோவாவில் உள்ள பெனாலிம் பகுதியில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

அடுத்த ஆண்டு பிரிக்ஸ் உச்சி மாநாட்டை நடத்த வேண்டியது சீனாவின் பொறுப்பாகும். இந்நிலையில், கோவாவில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த சீன ஜனாதிபதி ஜின்பிங், பிரிக்ஸ் அமைப்பின் 8 ஆவது உச்சி மாநாடு சீனாவிலுள்ள கடலோர நகரமான க்சியாமென் நகரில் நடைபெறும்.

இந்த மாநாடு பிரிக்ஸ் அமைப்புக்கான ஒரு புதிய அத்தியாயமாக இருக்கும் என தெரிவித்தார்.

சீனாவின் பியூஜியான் மாகாணத்தின் திபெத் ஜலசந்தி பகுதியில் அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் க்சியாமென் நகரம் உலகின் மிகவும் 'ரொமான்ட்டிக்' நகரமாக கடந்த 2011 இல் தேர்வாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உலகளவில் பாதுகாப்பில்லாத நாடுகளின் பட்டியல் வெளியீடு

உலக பொருளாதார அமைப்பு "Global Travel And Tourism" என்ற பெயரில், உலகளவில் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பில்லாத நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

குறித்த நாட்டில் நிலவும் அபாயகரமான சூழ்நிலைகள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டே இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. பாதுகாப்பற்ற நாடுகளாக, நைஜீரியா, கொலம்பியா, ஏமன், பாகிஸ்தான், வெனிசுவேலா நாடுகளையும் பாதுகாப்பான நாடுகளாக பின்லாந்து, கட்டார், ஐஸ்லாந்து, ஆஸ்திரியா, ஐக்கிய அரபு நாடுகளையும் அறிவித்துள்ளது. (இ-7-10)

# தண்ணீர் விவகாரத்தை ஆயுதமாக பயன்படுத்த இந்தியா விரும்புகிறது

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

*(இஸ்லாமாபாத்)*

***தங்கள் நாட்டிற்கு எதிராக தண்ணீர் விவகாரத்தை ஆயுதமாக பயன்படுத்த இந்தியா விரும்புகிறது என்று பாகிஸ்தான குற்றம் சாட்டியுள்ளது.***



சிந்து நீர் ஒப்பந்தம் (Indus Waters Treaty) சிந்து ஆற்று நீரை இந்தியாவும் பாகிஸ்தானும் பகிர்ந்து கொள வதற்காக செப்டெம்பர் 19, 1960 இல் ஏற்பட்டதாகும். அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவும் பாகிஸ்தான் ஜனாதிபதி முகமது அயூப்கானும் இதில் கையெழுத்திட்டார்கள். உலக வங்கி மூன்றாவது சாட்சியாக இதில கையொப்பமிட்டது.

இந்திய பாகிஸ்தான் எல்லையில் நிலவி வரும் பதற்றமான சூழல் காரணமாக இருநாடுகளின் உறவில் தற்போது சிக்கல் வலுத்துள்ளது.

இதனால் சிந்து நீர் ஒப்பந்தத்தை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும் என்று இந்தியா தரப்பில் கோரிக்கைகள் எழுந்தன. இது தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.


இந்நிலையில், தங்கள் நாட்டிற்கு எதிராக தண்ணீர் விவகாரத்தை ஆயுதமாக பயன்படுத்த இந்தியா விரும்புகிறது என்று பாகிஸ்தான் குற்றம்சாட்டியுள்ளது.

இது குறித்து பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சிறப்பு உதவியாளர் தரிக் பதெமி கூறுகையில், இது அப்பட்டமான சர்வதேச ஒப்பந்தத்தை மீறும வகையிலான நடவடிக்கை என்று தெரிவித்தார்.

மேலும் காஷ்மீரில் இந்தியா மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்களுக்கு கண்டனம் தெரிவிப்பதாக கூறினார். இந்தியாவின் இத்தகைய போர்வெறி மற்றும் ஆககிரமிப்பு நடவடிக்கைகள் மீது சர்வதேச அமைபபுக்கள் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தினார். (இ-7)

# இஸ்ரேலைப் போன்றது இந்திய இராணுவம்

## பிரதமர் மோடி பெருமிதம்



(மண்டி)

துல்லியமான தாக்குதல் நடவடிக்கையில் இஸ்ரேல் இராணுவத்தை போன்றது. இந்திய இராணுவம் என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

உலகளவில் குற்ற வழக்குகளில் துப்பு துலக்குவதில் ஸ்கொட்லாந்து யார்டு பொலிஸார் பிரபலம் ஆனவர்கள். அதேபோன்று பகை நாடுகள் மீதும் போராளிகள் மீதும் துல்லியமான தாக்குதல் நடவடிக்கை எடுப்பதில் இஸ்ரேல் இராணுவம் பிரபலமானது.

கடந்த மாதம் 28ஆம் திகதி எல்லைக் கட்டுப்பாட்டு கோடுப்பகுதியில் முகாமிட்டு காஷ்மீரிலும் இந்திய நகரங்களிலும் தாக்குதல் நடத்த சதி திட்டம் தீட்டிக்கொண்டிருந்த பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மீது இந்திய இராணுவம் துல்லியமான அதிரடி தாக்குதல் நடத்தி, பயங்கரவாதிகளின் 7 முகாம்களை அழித்தது. இந்த தாக்குதலில் 38 பயங்கரவாதிகள், 2 சிப்பாய்கள் கொல்லப்பட டனர். இதன் மூலம், இந்தியாவை தாக்க திட்டமிட்ட பயங்கரவாதிகளின் சதி முறியடிக்கப்பட்டது.


இதுபற்றி, பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் இமாச்சல பிரதேச மாநிலத்தில் 3 நீர்மின் திட்டங்களை தொடங்கிவைத்து பேசிய போது "இஸ்ரேல் இராணுவத்தைப் போன்றது இந்திய இராணுவம்" என பெருமிதத்துடன் கூறினார். அப்போது அவர் கூறியதாவது.

இந்த நாட்களில் நமது இராணுவத்தின் வீரம் பற்றி நாடு முழுவதும் பேசப்படுகிறது. விவாதிக்கப்படுகிறது. இதற்கு முன்பு இதை (துல்லியமான தாக்குதல்) இஸ்ரேல் நாட்டின் இராணுவம் செய்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

நமது இராணுவம், யாருக்கும் சளைத்தது இல்லை என்பதை இந்த நாடு, இப்போது கண்டிருக்கிறது. முன்னாள் இராணுவத்தினருக்கு ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம் என்ற திட்டத்தை எங்கள் அரசு நிறைவேற்றி இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மறு உத்தரவு வரும் வரை 2000 கன அடி நீர் திறக்க வேண்டும்

# கர்நாடகாவிற்கு உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு



(டில்லி)

மறு உத்தரவு வரும்வரை தமிழகத்துக்கு விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீரை, கர்நாடகா திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டது.

காவிரிப் பிரச்சினை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, அமித்தவாராய், ஏ.எம்.கன்விகார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்விசாரணைக்கு வந்தது.

அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்தஹி உயர்மட்ட தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையை நீதிபதிகள்முன் தாக்கல் செய்தார்.

அவர் வாதிடும்போது, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை எதிர்த்து கரநாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்கள் தொடர்ந்த வழக்கு இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள் 131 மற்றும் 262 ஆகியவற்றின் படியும் மாநிலங்களுக்கு இடையேயான தண்ணீர் தாவா சட்டத்தின் கீழும் விசாரணைக்கு உகந்ததல்ல.

தீர்ப்பாயம் இறுதித் தீர்ப்பு வழங்கியிருப்பது உச்ச நீதி மன்ற தீர்ப்பைப் போலாகும்.

உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்வதை உச்ச நீதிமன்றமே விசாரிக்க முடியாது என்று வாதிட்டார்.

அப்போது கர்நாடக அரசு சார்பில ஆஜரான மூத்த சட்டத்தரணி பாலி நாரிமன் வாதிடும்போது, இரு மாநிலங்களுக்கும் இடையிலான பிரச்சனை என்பதால் எங்கள் மேல் முறையீட்டு மனு விசாரணைக்கு ஏற்றது தான்.

கர்நாடகத்தில் தற்போது குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, இதற்கு மேல் தண்ணீரைத் திறந்துவிட உத்தரவிட முடியாது என்று வாதிட்டார். தமிழக அரசு சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி சேகர் நாப்டே வாதிடும்போது, காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தமிழகத்திற்கு 64 டிஎம்சி தண்ணீர் திறந்து விட வேண்டும்.

ஆனால், கர்நாடக அரசு குறைவாகவே தண்ணீர் திறந்துள்ளது.

தமிழகத்தில் வரட்சி நிலவுவதால் தமிழகத்திற்கு தர வேண்டிய தண்ணீரை திறந்துவிடுமாறு உத்தரவிட வேண்டும் என்றார். இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை இரு மாநிலங்களும் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும்.

மாநிலங்களின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது அந்தந்த மாநிலங்களின் கடமை. எனவே, மறு உத்தரவு வரும்வரை தமிழகத்திற்கு தினமும் விநாடிக்கு 2000 கன அடி தண்ணீரை கர்நாடக மாநிலம் திறந்து விட வேண்டும்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை முதலில் விசாரித்த பின்னர், உயர்மட்ட தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை குறித்து விசாரிக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

### கர்நாடகா உடனடி திறப்பு

கர்நாடக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் கூறியதாவது, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, தமிழகத்திற்கு தினமும் விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துள்ளோம்.

இதனால், மாநிலத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. இந்த விடயத்தில் விவசாயிகள், பொதுமக்கள் யாரும் கவலையடைய வேண்டாம். காவிரி விடயத்தில் நமக்கு கண்டிப்பாக நியாயம் கிடைக்கும் என்றார். பாதுகாப்புச் சபை தலைவரும் முன்னாள் எம்.பியுமான ஜி.மாதேகவுடா கூறுகையில், உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக செயற்பட்டால், பெரியளவில் பாதிப்பு ஏற்படும். ஆகவே மாநில அரசு தண்ணீர் திறந்துள்ளதை யாரும் எதிர்த்து போராட்டம் நடத்த வேண்டாம் என்று கேட்டுகொண்டார். (இ-7)

# திருநெல்வேலி சிறுவன் விபத்து மரணம் மன்னிக்க முடியாத பாவச்செயலாகும்

## நீதிபதி இளஞ்செழியன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தியில் இரண்டு பேருந்துகள் போட்டிக்கு ஓடியபோது ஏற்பட்ட விபத்தில் சிறுவன் ஒருவன் மரணமடைந்த சம்பவம் மன்னிக்க முடியாத பாவச்செயல் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார். இத்தகைய விபத்து மரணங்கள் ஏற்படாத வண்ணம் பேருந்துச் சாரதிகளுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.**

திருநெல்வேலி சந்தியில் ஒன்றையொன்று முந்திச் செல்வதற்காக இரண்டு பேருந்துகள் போட்டிக்கு வேகமாக ஓடியபோது, எதிரில் வந்த ஆட்டோ மீது மோதியதில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.அவனுடைய தாயார் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து மரணம் தொடர்பில் பேருந்துச் சாரதி ஜெயபாலச்சந்திரன் பிரகாஷ் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது,

நீதிபதி இளஞ்செழியன் எதிரிக்கு பிணை வழங்க மறுத்து, வழக்கு விசாரணையை நவம்பர் மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது,

வாகன விபத்து மரணங்கள் இப்போது அதிகரித்திருக்கின்றன. போட்டிக்கு வாகனம் ஓடுவது, கவனமின்றி வாகனங்களைச் செலுத்துவது போன்ற காரணங்களினால் அப்பாவிகள் உயிரிழந்திருக்கின்றார்கள். இதனை அனுமதிக்க முடியாது.

வாகன விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக சாரதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மையில் வாகன விபத்தில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார். ஒரு மாதத்திற்கு முன்னர் வைத்தியர் ஒருவர் உயிரிழந்தார். வவுனியா வைத்தியர் ஒருவரும் வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த வழக்கில் முந்திச் செல்ல வேண்டும் என்பதற்காக வீதியை முழுமையாக அடைத்துக் கொண்டு போட்டிக்கு பேருந்துகளை செலுத்திச் சென்றபோது திருநெல்வேலி சந்தியில் எதிரில் வந்த ஆட்டோவை மோதி, அதில் பயணம் செய்த சிறுவன் ஒருவனைப் பந்தாடி, அவனுடைய தாயாரைப் படுகாயப் படுத்தியதுடன், புதிதாகத் திறக்கப்பட்டிருந்த வங்கிக் கட்டடத்தின்முகப்பை உடைத்து விபத்தை ஏற்படுத்தியதாக சாரதிக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விபத்து மரணம் மன்னிக்க முடியாத பெரும் பாவச்செயலாகும்.

முந்திச்சென்றுவிட வேண்டும் என்பதற்காக போட்டி போட்டு ஓடுகின்ற அனைத்து வாகனங்களும் கைப்பற்றப்படும்.

அந்த வாகனங்களின் வழி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய வாகன சாரதிகளின் அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும்.

மதுபோதையில் வாகன மோடுவது, அதிவேகமாக செலுத்துவது, பூட்டப்பட்ட ரயில் கடவைகளில் புகுந்து மோட்டார் சைக்கிள் செலுத்துவது போன்ற செயல்களுக்கு தண்டனை அதிகரிக்கப்படும்.

விபத்து மரணச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளில் மேல் நீதிமன்றத்தில் பிணை மனுக்கள் நிதானமாகவே பரிசீலிக்கப்படும் என தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன்.

திருநெல்வேலி சிறுவன் விபத்து மரண வழக்கில் பிணை வழங்குவதா? இல்லையா? என்பது பற்றி எதிர் வரும் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனக் கூறி வழக்கை ஒத்தி வைத்தார். (இ-7-10)

# ஜனாதிபதி தனது உரையில் உள்ள தவறை திருத்திக்கொள்ள வேண்டும்

## புரவெசி பலய வலியுறுத்தல்

(கொழும்பு)

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரையினால் அதிருப்தியும், கவலையும் அடைந்துள்ளதாக புரவெசி பலய அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 12ஆம் திகதி ஆற்றிய "சத்விரு சங்ஹிந்த" உரையின்போது ஊழல்மோசடிகள் மற்றும் பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுவரும்சி.ஐ.டி. எப்.சி.ஐ.டி மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அரசியல் நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்கு அமைய செயற்படுவதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் இந்த கருத்து தொடர்பில் பரவலான விமர்சனங்கள் வெளியாகிவரும் நிலையில், புரவெசி பலய அமைப்பின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய இந்த விடயம் தொடர்பில் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த உரையினால்குறித்த திணைக்களங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகத்தன்மையை மாற்றியமைக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையில் உள்ள தவறினை உடனடியாக திருத்திக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உரையானது தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியாகவும் நாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும், எனினும் இவ்வாறான ஒரு நிலைமையினை மாற்றியமைக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே கடந்த வருடம் ஜனவரி மாதம் 8ஆம் திகதி மக்கள் மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் நாட்டு மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் தனது எதிர்கால செயற்பாடுகள் அமையுமென்பதை ஜனாதிபதி நிரூபிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படும் நல்லிணக்க அரசியல் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்காக செயற்படும் குழு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் செயற்படுவதாகவும், அவர்கள் தொடர்பில் ஜனாதிபதி தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் புரவெசி பலய அமைப்பின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இராணுவ பயிற்சிகளை நடத்த இனிமேல் தடை

தேசிய வனவிலங்கு சரணாலயங்களில் இனி வரும் காலங்களில் இராணுவ பயிற்சிகளை நடத்த முடியாது என வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரத் பதிரட்ன கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

நிலையான அபிவிருத்தி மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவின் உத்தரவிற்கு அமைய இவ்வாறு இராணுவ பயிற்சி நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாதுருஓயா, மின்னேரியா போன்ற பகுதிகளில் இடையிடையே இவ்வாறு இராணுவ பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயிற்சி நடத்தப்படுவதனால் அவற்றில் வாழ்ந்து வரும்விலங்கினங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக மாதுருஓயா வனவிலங்கு சரணாலய பகுதியில் அமைந்துள்ள இரண்டு இராணுவ முகாம்களின் பயிற்சி நடவடிக்கைகளின் போதான கவனக் குறைவினால் பாரியளவு காடு தீப்பற்றி அழிவடைந்துள்ளது.

தானியங்கி துப்பாக்கிகளால் மேற்கொள்ளும் துப்பாக்கிச் சூடுகளினால் காடுகளில் பெரும் எண்ணிக்கையிலான யானைகள் உள்ளிட்ட விலங்குகள் கொல்லப்பட்டுள்ளன.

மேலும் மாதுருஓயா வனவிலங்கு சரணாலயப் பகுதியில் மட்டும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சுமார் 30 யானைகளின் மண்டை ஓடுகள் காணப்படுகின்றன.

இராணுவப் பயிற்சியினால் பீதியடையும் யானைகள் அயல் கிராமங்களை நோக்கிப் படை எடுப்பதனால் கிராம மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மனித செயற்பாடுகளினால் அதிகளவு யானைகள் உயிரிழக்கும் பகுதியாக மாதுருஓயா கருதப்படுகின்றது எனவும் சரத் பதிரட்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)



தட்டாதெருச் சந்தியில் நேற்றுப் புதன்கிழமை காலை ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகி தடம்புரண்டன.

# வாய்க்காலை மீட்டுத்தரக்கோரி புத்தூர் மக்கள் நேற்று போராட்டம்

புத்தூர் வடக்கில் இருந்து புத்தூர் கிழக்குப் பகுதிக்கு செல்லும் வாய்க்காலை மீட்டுத் தருமாறு கோரி புத்தூர் வடக்குப் பகுதியில் உள்ள மக்கள் நேற்றைய தினம் வலி.கிழக்கு பிரதேச சபை முன்றலில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

புத்தூர் வடக்குப் பகுதியில் உள்ள வயல் காணியின் ஊடாக புத்தூர் கிழக்கு நுணுவில் குளம் வரை செல்லும் வாய்க்காலை தனியார் கொள்வனவு செய்து அப்பகுதியில் அமைந்துள்ள வாய்க்காலை மூடி கட்டடங்கள் அமைப்பதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் இதனால் அப்பகுதியில் உள்ள வயல் பெரிதும் பாதிப்படைவதுடன் மழைகாலங்களில் நீர் வழிந்தோட முடியாது கிராமத்துக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்படும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.




குறித்த விடயம் தொடர்பாக பிரதேச சபைக்கு முறைப்பாடு செய்திருந்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் நேற்றைய தினம் குறித்த போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த உள்ளூராட்சி ஆணையாளர் குறித்த மக்களை சந்தித்து கலந்துரையாடியதுடன் ஒரு வார காலத்திற்குள் குறித்த பிரச்சினைக்கான தீர்வினை எடுப்பதாக வாக்குறுதி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். (இ-9)

# முன்னாள் இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

**பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணைக் குழுவின் எதிரில் இன்று முன்னிலையாகுமாறு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரட்நாயக்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**



2015ஆம்ஆண்டுஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாக, இராணுவ வங்கிக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 50 மில்லியன் ரூபா அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

குருநாகல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கட்டடப் பொருட்களை வழங்குவதற்கு எனத் தெரிவித்து குறித்த பணம் இராணுவ கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்தினால் இந்தப் பணம், இராணுவ வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளராகவும் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் தலைவராகவும் கடமையாற்றிய லலித் வீரதுங்க மற்றும் பணிப்பாளர் நாயகம் அனுச பெல்பிட்ட ஆகியோர் நிதியை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளனர். இந்த விடயம் தொடர்பிலேயே முன்னாள் இராணுவத் தளபதியிடம் இன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

முன்னாள் படையதிகாரிகள்நீதிமன்றங்கள் ,ஆணைக்குழுக்கள் முன்னிலையில் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு ஜனாதிபதி அண்மையில் கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# நல்லாட்சி அரசின் பணிகளை "தொட்டு உணர முடியாது"

## ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்



நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், எதனையும் மேற்கொளவில்லையென முன்னாள் தலைவர்கள் கூறினாலும், முன்னாள் தலைவர் நாட்டுக்காக நிறைவேற்றாத பொறுப்புக்களையே நிறைவேற்றி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் 3,828 அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் நாடாளுமன்ற விளையாட்டரங்கில் இடம்பெற்றபோது, இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவை தொட்டு உணர முடியாத கண்ணுக்கு புலப்படாத விடயங்களாக இருந்த போதிலும் தாய் மண்ணினதும் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்திற்காகவும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களே அவைகள் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டு மக்கள் இழந்து போயிருந்த சுதந்திரம், ஜனநாயகம், அடிப்படை உரிமைகளை வெற்றி கொள்வதற்கும், சர்வதேச ஒத்துழைப்பை நாட்டுக்காக பெற்றுக் கொடுப்பதற்கும் கடந்த இரண்டுஆண்டுகளில்தற்போதைய அரசாங்கத்தால் முடிந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் இன்று தேசிய சர்வதேச மட்டங்களில் தாய் மண்ணுக்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றி வருவதுடன் தரமான அரசியல் எண்ணக் கருவிற்கமைய நாட்டை முன கொண்டு செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை பொருளாதார ரீதியில் பலப்படுத்தி கல்வி கற்ற இளம் தலைமுறையினரின் எதிர்காலத்துடன் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இனிவரும்காலங்களில் அர்ப்பணிப்புடன் செயலாற்றவுள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# தில்ருக்ஷியின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் தில்ருக்ஷி டயஸ் விக்கிரம சிங்கவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விரைவில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர் நியமிக்கப்படுவார் என்றும் அவர் தமது அமைச்சரவை சகாக்களிடம் கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் தாம் நிகழ்த்திய உரை தொடர்பாக ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார்.

தாம் கோத்தபாய ராஜபக்ஷவைக் காப்பாற்ற முனையவில்லை என்றும் கூறியுள்ள அவர், அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணை செய்தபோது அங்கு 15 வரையான பொலிஸ் விசாரணையாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிவித்தார்.



கோத்தபாய ராஜபக்ஷவுடன் விசாரணைக்கு அழைக்கப்பட்ட மூன்று முன்னாள் கடற்படைத் தளபதிகளின் கௌரவம் பாதிக்கப்படுவது பற்றியே தாம் பேசியதாகவும் ஜனாதிபதி நியாயப்படுத்தியுள்ளார். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

# அக்கறைக் கேள்விகள்

குசலம் விசாரிப்பது என்பது உலகெங்கிலும் உள்ள பழக்கம். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பாணி.

நாம் சௌக்கியமா?என்று கேட்பதை வழக்கமாக வைத்திருக்கிறோம். இது போதாது பலருக்கு. இதற்கு மேல் என்ன கேட்பது என்று தெரியாது. புரியாது எல்லோரும் பின்பற்றும் ஒன்றை மட்டும் நாம் பின்பற்றும் போது நாம் தனித்து நிற்பது என்பது அடிபட்டுப் போகிறது. எனவே நாம் ஒருபடி மேலே செல்ல ஓர் உத்தியைக் கையாள வேண்டும்.

அதாவது இயந்திரத் துப்பாக்கியைத் தட்டிவிட்டது போல் அக்கறை மிகுந்த கேள்விகளைத் தொடர்ந்து கேட்க வேண்டும்.

வீடு கட்டிக் கொண்டிருந்தீர்களே முடித்து விட்டீர்களா?

பிள்ளைகள் நன்றாகப் படிக்கிறார்களா?

இடமாற்றத்திற்கு முயற்சி செய்து கொண்டிருந்தீர்களே? கிடைத்ததா?

பெண்ணுக்கு வரன் பார்த்தீர்களே,எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது?

கால் வலியால் ரொம்ப நாள் அவதிப்பட்டீர்களே, இப்போது எப்படி இருக்கிறது?

என்று சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஏற்ற கேள்விகளாகக் கேட்க வேண்டும். அவர் திணறிப் போக வேண்டும். இயந்திரத்துப்பாக்கியின் வேகத்தில் கேட்கலாமே தவிர பதிலையும் இயந்திரமாய்க் கேட்டுக் கொள்ளக்கூடாது. ஆர்வத்துடன் விடயத்தைக் கிரகித்துக் கொள்ள வேண்டும். "படப்படன்னு நாலு கேள்வியைக் கேட்டுட்டு நகர்ந்துடுவாம்ப்பா. பதிலைக் கூடக் காதில் வாங்கிக்க மாட்டான்" என்று பெயரெடுப்பதில் புண்ணியமில்லை.

"அட!அப்புறம்?" என்று கிளறுவது முக்கியம் பரவாயில்லை. நம்மிடம் ரொம்பப் பிரியமாய் நம் விடயத்தில் ஆர்வமாய் இருக்கிறார் என்ற பெயரை ஒவ்வொருவரிடமும் சம்பாதித்துக் கொள்வது முக்கியம். குடும்ப டாக்டரைப் பார்க்கப் போனால்கூட அவர்தான் கேள்வி கேட்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடா. "என்ன டாக்டர் காரை மாத்திட்டீங்க போலிருக்கே!" என்று டாக்டர் விரும்பும் விடயமாகப் பார்த்துக்கேட்டுவைக்க வேண்டும்.

சிலருக்குத் தாங்கள் அடைந்த புதுப்பெருமைகளை யாரிடமாவது கொட்ட வேண்டும் என்ற உணர்வு எப்போதும் இருக்கும். அதற்கு நாம் கேள்வி கேட்பதன் மூலம் வடிகால் தந்தால் நம்மை அவர்களுக்கு மிகமிகப் பிடித்துப் போகும். அப்புறம் அவர்கள் நம் கையில் அல்லது நம் பையில்.

நம் வீட்டுத் திருமணத்திற்கு ஒருவர் மட்டும் வருகிறார் என்றால் அவரைச் சும்மா விடக்கூடாது "ஏன் குடும்பத்தோடு வரலை?" என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைக்க வேண்டும். உள்ளேயோ உட்கார இடமிராது. சாப்பாடோ போதாது. ஆனாலும் கேட்டு வைக்க வெண்டும்.

அதன்பிறகு

தன்னைக் கவனிக்காவிட்டாலும் சரி.அவருக்கு வருத்தம் வராது.அது மட்டுமா? வீட்டில் போய் நம் புகழைப் பாடத் தொடங்கிவிடுவார். "ஏங்க,நாங்க ஏன் வரலைன்னு கல்யாண வீட்ல யாருமே கேட்கலையா?" என்று ஏக்கத்துடன் கேட்பவர்களின் வாயையும் நம் கேள்வி அடைத்ததாக ஆகும்.

அவர்கள் வீட்டுக்குப் போனால் 33 1/3 சதவிகித விசாரிப்பும் பொது இடத்தில் சந்திக்க நேர்ந்தால் 66 1/3 சதவிகித விசாரிப்பும் 100 சதவிகித விசாரிப்பும் வைத்துக்கொள்ள வேண்டும்.

நம்மைச் சுற்றியவர்களிடம் இம்முறையின் மூலம் பிடிப்பையும் பிரியத்தையும் ஏற்படுத்திக்கொள்வது நமக்குப் பலவிதத்திலும் நன்மையைத் தரும்.

ஆனால்,

கேள்விகள் ஒருபோதும் குடைவதாய் அமையக்கூடாது என்பதும் மிக முக்கியம்.

**லேனா தமிழ்வாணன்**




# லக்ஷ்மி கடாட்சம்!

முன்னொரு காலத்தில் மாமுனிவர் ஒருவர் காட்டில் தவம்செய்து வந்தார். சிறு வயதிலிருந்தே தவக்கோலம் பூண்டு இறைவனை தொழுது வந்ததால், அந்த காட்டில் வசித்த கொடிய மிருகங்கள் கூட அவரிடம் குழந்தைகளை போல நடந்து கொண்டன.

ஒரு நாள் அவர் முன் அழகிய பெண் ஒருத்தி தோன்றினாள். அவளது பேரழகு பிரமிக்க வைத்தது.

இருப்பினும் மனம் சலனப்படாமல் அந்த அழகியை பார்த்து, "அம்மா நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"நான் தான் மகாலக்ஷ்மி என்னுடைய விதி பயனால் சில நாட்கள் உங்களுடன் வசிக்க வந்துள்ளேன். நீங்கள் என்னை உதறி தள்ளினாலும் உங்களை விட்டு நான் போகமாட்டேன். பிரம்மன் கட்டளைப்படி நான் உங்களுடன் இருந்தாக வேண்டும்," என்றாள்.

மகாலக்ஷ்மி போகமாட்டாள் என்பதை அறிந்த முனிவர் அந்த ஒப்பந்தத்திற்கு சம்மதித்தார்.

"அம்மா நீங்கள் வரும் பொழுது என்னிடம் சொல்லிக் கொண்டு வந்தது போல போகும் போது சொல்லி கொண்டே போக வேண்டும்," என்றார்.

லக்ஷ்மியும் சம்மதித்தாள். அன்றிலிருந்து தன் மீது லட்சுமியின் அருள் பூரணமாக இருப்பதை அறிந்தார். அதை சோதித்து பார்க்க விரும்பினார் முனிவர்.

எனவே, காட்டை விட்டு பொற்குன்றம் என்ற மாநகரை அடைந்தார். அந்த அரண்மனையின் அரசரும் மந்திரிகளும் அமர்ந்திருந்தனர்.

வேகமாக சென்ற முனிவர் தனது இடது காலை தூக்கி மன்னனது கிரீடத்தை ஒரு உதை விட்டார்.

மறுநிமிடம், "அடி! உதை அவனை பிடி!" என்றபடியே ஆயிரம் சேவகர்கள் முனிவரை சூழ்ந்து கொண்டனர்.


உடனே அரசன், "முனிவரை ஒன்றும் செய்யாதீர்கள். அவர் திரிகாலமும் உணர்ந்த ஞானி. என் கிரீடத்தை பாருங்கள்," என்றான்.

கிரீடத்தில் விஷநாகம் ஒன்று படமெடுத்துக் கொண்டிருந்தது. உடனே எல்லோரும் மகாபுருஷரை திட்டிவிட்டோமே என்று நினைத்து வருந்தினர். அதற்குள் விஷநாகம் ஓடி மறைந்தது. உண்மையில் அது விஷ நாகமல்ல லக்ஷ்மி தான் நாக உருவெடுத்து முனிவரைக் காப்பாற்றினாள்.

அன்றிலிருந்து அரசன் மாமுனிவருக்கு மந்திரி பதவி கொடுத்து சர்வ அதிகாரமும் கொடுத்தான். முனிவருக்கு லக்ஷ்மி கடாட்சம் இருந்ததால் அவர் செய்ததெல்லாம் பலித்தது. முனிவரும் நாட்டை நல்ல முறையில் ஆண்டார்.

இரண்டு வருடங்கள் ஓடின. மீண்டும் ஒரு நாள் தன்னுடன் லக்ஷ்மி இருக்கிறாளா என்பதை அறிய விரும்பினார் முனிவர்.

அன்றிரவு அரசனும், அரசியும் தூங்கிக் கொண்டிருந்த பள்ளியறைக்கு சென்றார். இருவரையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்.



அந்த கிழவனின் தலையை வெட்டினால் என்ன என்று நினைத்து ஆத்திரம் கொண்டார். அதற்குள் பள்ளியறை கட்டிடம் இடிந்து விழுந்தது. அதை பார்த்த அரசனுக்கு மாமுனிவர் மேல் அளவிடாத பாசம் வந்தது. (தொடரும்)




- 1803 - ஐக்கிய அமெரிக்கா லூசியானாவை பிரான்சிடம் இருந்து கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளித்தது.
- 1827 - ஓட்டோமான், எகிப்தியப் படைகள் பிரித்தானிய, பிரெஞ்சு, ரஷ்யக் கூட்டுப் படைகள் நவாரினோ என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தன. இது கிரேக்க விடுதலைப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது.
- 1941 - கிறகுஜேவாச் படுகொலைகள்: சேர்பியாவின் கிறகுஜேவாச் நகரில் ஆயிரக் கணக்கான மக்கள் நாசி ஜேர்மனியர்களினால் கொல்லப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் யூகோசுலாவியத் தலைநகர் பெல்கிரேட்டை ஜேர்மனியிடமிருந்து மீட்டது.
- 1944 - கிளீவ்லன்ட் நகரில் இயற்கை வாயுக் குழாய் வெடிப்பினால் 130 பேர் கொல்லப்பட்டனர்.
- 1955 - த லோட் ஒவ் த ரிங்ஸ் நூலின் கடைசிப் பாகமான ரிட்டர்ன் ஒஃப் த கிங் வெளியிடப்பட்டது.
- 1946 - புவேர்ட்டோ ரிக்கோ விடுதலைக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1973 - சிட்னி ஒப்பேரா மாளிகை திறந்து வைக்கப்பட்டது.
- 1976 - மிசிசிப்பி ஆற்றில் பயணிகள் கப்பல் ஒன்று சரக்குக் கப்பலுடன் மோதியதில் 78பயணிகள் கொல்லப்பட்டனர். 18 பேர் மட்டும் தப்பினர்.
- 1982 - இலங்கையின் முதன் முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.
- 1982 - மாஸ்கோவில் இடம்பெற்ற பன்னாட்டு உதைப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 66 பேர் இறந்தனர்.
- 2001 - இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணிக் கட்சி தொடங்கப்பட்டது.
- 2004 - முதலாவது உபுண்டு லினக்ஸ் வெளியிடப்பட்டது.

பிறப்புகள்

- 1469 - குரு நானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர். (இ. 1539)
- 1884 - டி. எஸ். சேனநாயக்கா, இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி. (இ. 1952)
- 1923 - தொ. மு. சி. ரகுநாதன், எழுத்தாளர், திறனாய்வாளர். (இ. 2001)
- 1923 - வி. எஸ். அச்சுதானந்தன், கேரள முதல்வர்
- 1925 - ஆர்ட் புச்வால்ட், அமெரிக்க நகைச்சுவையாளர்.
- 1946 - எல்ஃப்ரீத் ஜெலினெக், ஆஸ்திரிய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1954 - ந. செல்வராஜா, இலங்கையை சேர்ந்த நூலகவியலாளர், ஆய்வாளர்.
- 1971 - ஸ்னூப் டாக், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்.
- 1978 - வீரேந்தர் சேவாக், இந்தியத் துடுப்பாளர்.

இறப்புகள்

- 1984 - கார்ல் கோரி, ஆஸ்திரிய மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1896)
- 1984 - போல் டிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய இயற்பியலாளர். (பி. 1902)
- 2008 - ஸ்ரீதர், தமிழ்த் திரைப்பட இயக்குனர். (பி. 1933)
- 2014 - ராஜம் கிருஷ்ணன், தமிழக எழுத்தாளர். (பி. 1925)

சிறப்பு நாள்

- பஹாய் சமயம் – புனித நாள்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 50 | 120 | 80 |
| தக்காளி | 80 | 100 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 80 | 50 |
| கோவா | 70 | 100 | 80 | 100 | 80 |
| கரட் | 50 | 100 | 120 | 160 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 | 60 | 30 |
| புடோல் | 40 | 50 | 30 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 100 | 120 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 40 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | 60 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 100 | 80 |
| லீக்ஸ் | 160 | 200 | 80 | 150 | 140 |
| பீற்றூட் | 80 | 80 | – | 80 | 50 |
| குடைமிளகாய் | 140 | 200 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 55 | 80 | 80 |
| போஞ்சி | 180 | 200 | – | 200 | 200 |
| கத்தரிசம்பள்ளா | 60 | 30 | 35 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 25 | 30 | 10 |
| தேசிக்காய் | 600 | 500 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-35 | 35-45 | 50 |
| இராசவள்ளி | – | – | – | – | 170 |
| வெங்காயப்பூ | 150 | – | – | – | 200 |
| முள்ளங்கி | 60 | – | 30 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 30 | – | 10 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 50 | – | – | – |

# சி.எஸ்.என்.தொலைக்காட்சி சேவை நிறுவன காணி ,கட்டடம் பறிமுதல்!

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் மகனான யோஷித ராஜ பக்ஷவுக்கு சொந்தமான சி.எஸ்.என். தொலைக்காட்சி சேவை மற்றும் அதனை நடத்திச் சென்ற நிறுவனத்தின் காணி என்பன நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பறிமுதல் செய்யப்பட்டுள் ளன.**



நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பத்தரமுல்லையில் அமைந்துள்ள 29 பேர்சஸ் காணியை டீ.ஏ.ராஜபக்ஷ அறக்கட்டளைக்கு 2003ஆம் ஆண்டு 30 வருடங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டது. இதற்காக வருடாந்தம் 163,125 ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

எனினும் அந்த காணியை வேறு எந்தவொரு நடவடிக்கைக்காகவும் பயன்படுத்த முடியாது என்ற ஒப்பந்தத்தை மீறி, சி.எஸ்.என். வர்த்தகத்தை நடத்தி சென்ற காரணத்தினால் அதற்கமைய ஒப்பந்தம் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடம் மற்றும் அதன் சொத்துக்கள் தொடர்பில் உரிமையை உறுதி செய்யும் உரிமையாளர் இல்லாமையினால் அந்த கட்டடம் அரச உடைமையாக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் யோஷித ராஜபக்ஷவின் கால்டன்ஸ்போர்ட்ஸ் நெட்வர்க் (CSN) தொலைக்காட்சி சேவைக்கு சொந்தமான ஒளிபரப்பு வாகனங்கள் தேசிய தொலைக்காட்சி சேவையிடம் ஒப்படைக்குமாறு கடுவெல நீதிபதியால் உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சீனாவில் ஊர் சுற்றும் கோத்தபாய

## ஆலயங்களிலும் விசேட வழிபாடு





முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய தொடர்பில் பல்வேறு வகையான கருத்துகள் தற்போது நாட்டில் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஒருதரப்பினர் அவருக்கு ஆதரவாகவும் மற்றும் ஒரு தரப்பினர் அவருக்கு எதிராகவும் கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அவர் மீது வழக்கு விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவர் சீன விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார். சீனாவில் பல்வேறு சமய வழிபாட்டு தலங்களுக்கு அவர் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளதோடு மகிழ்ச்சிகரமான சுற்றுலா பொழுதினையும் தன் மனைவியுடன் சீனாவில் கழித்து வருகின்றார்.

பெல்ஜியத்திற்கான விஜயத்தில் ஈடுபட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொக்லேட் தயாரிப்பில் ஈடுபட்ட புகைப்படங்கள் வைரலானதைப்போல், இவரின் சீன புகைப்படங்களும் தற்போது வைரலாகிக்கொண்டு வருகின்றன. (இ-7-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 874


சிவம்




ராதை




அன்ரனி




சுயன்




றொகான்




யோகேஸ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# WINGS

A FESTIVAL OF ARTS

අපේක්ෂාවේ පියාසැරිය

நம்பிக்கையின் சிறகசைப்பு

கலைத்துவச் செயற்பாடுகள் மற்றும் உருவாக்கங்கள் மூலமாக நல்லிணக்க எண்ணக்கருவை அணுகும் வகையில் நாடு முழுவதிலிமிருந்தான கலைஞர்கள், செய்முறையாளர்கள், எழுத்தாளர்கள், இளையோர்கள் மற்றும் கலைக்குழுக்களினால் வடிவமைக்கப்பட்ட கலைப்படைப்புக்களை காட்சிப்படுத்தும்

**வடபுலத்திலிருந்து ஆரம்பமாகும் தேசியமட்ட பெருவிழா**

# கலைகளின் சங்கமம்

**2016 ஒக்டோபர் மாதம் 21,22,23 ஆம் திகதிகளில்**
**காலை 9.00 மணி தொடக்கம் மாலை 9.00 மணி வரை**
**கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபம் மற்றும்**
**கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில்**

**தமிழ், சிங்கள, முஸ்லீம் சமூகங்களின் பாரம்பரிய கலைகள், மேடை நாடகங்கள், சிறுகதை எழுத்தாக்கங்கள், கருத்துக்கள நாடகங்கள், ஆடல், பாடல் மற்றும் நடன ஆற்றுகைகள், திரைப்படக் காட்சிகள், கவியரங்கம், கலைக்கருத்தரங்குகள் மற்றும் ஓவியக்கண்காட்சி போன்ற நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.**

**அனுமதி இலவசம்**

விழா பங்குதாரர்கள்:

ජාතික සමගිය හා සංහිඳියා කාර්යාංශය
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்
OFFICE FOR NATIONAL UNITY AND RECONCILIATION

European Union

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

giz

care

YOUth CREATE

www.wingssrilanka.com

# 2017 வரவு - செலவுத் திட்டத்தில் வறுமை ஒழிப்பிற்கு முன்னுரிமை

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

**(கொழும்பு)**

**அரசாங்கத்தினால் 2017 ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில், வறுமையை ஒழிப்பதற்கே முன்னுரிமை கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி, 2017 ஆம் ஆண்டை வறுமை ஒழிப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆசிய பிராந்திய காலநிலை மாற்றம் தொடர்பான ஐந்தாவது சர்வதேச மாநாடு நேற்று கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதியில் ஆரம்பமாகியுள்ளது.

ஆசிய நாடுகளிலுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான அறிஞர்கள், விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் என ஏராளமானோர் பங்குபற்றியிருந்த மாநாட்டில் ஜனாதிபதி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

ஸ்திரமான அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படும் தனது அரசாங்கம், சுற்றுச்சூழலை பாதிக்கும் வகையில் செயற்படும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

"ஐந்து மாதங்களுக்கு முன்னர் கொழும்பு உட்பட நாட்டின் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால் இன்று எமது நாடு மோசமான வரட்சிக்கு முகம்கொடுத்துள்ளது. இதனால் நாட்டின் சனத்தொகையில் நான்கில் ஒரு வீதமானோர் குடிப்பதற்கு தண்ணீர் இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அவர்களுக்கு பௌசர்கள் மூலம் நீரை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக அரச அதிகாரிகளை மாத்திரமன்றி இராணுவம் உட்பட முப்படையினரையும் ஈடுபடுத்தியுள்ளோம்.

எனினும் பௌசர்கள் கூட செல்ல முடியாத பல கிராமங்கள் இருக்கின்றமை எமது நாடு முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கின்றது.

குடிநீர் தட்டுப்பாடு மாத்திரமன்றி குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் குளிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பல கிலோ மீற்றர் தூரம் நடந்துசென்று தண்ணீரை அள்ளிச்செல்ல வேண்டிய நெருக்கடிக்குள் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலைமையை எமது நாடு மாத்திரமன்றி உலகின் பெரும்பாலான நாடுகள் எதிர்நோக்குகின்றன.

காலநிலை மாற்றமே இதற்குப் பிரதான காரணம். இது குறித்து நாம் அனைவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் எமது நாட்டைப் பொறுத்த வரையில் கடுமையான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும் தகுதி, தராதரம் பார்க்காது கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளோம்.

மின்சாரத் தேவைகளை பூர்த்திசெய்ய சூரிய ஒளி, கடல் அலை மற்றும் காற்று ஆகியவற்றை பயன்படுத்திக் கொள்வதற்கு அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"வறுமையிலிருந்து நாட்டை முழுமையாக மீட்கும் எமது திட்டத்திற்கு அமைய நிரந்தர அபிவிருத்தி இலக்குகளுக்கே முன்னுரிமைகொடுத்து செயற்படவுள்ளோம்.

இதன் போது மின் வலு மற்றும் எரிசக்தியின் தேவை மிகவும் அவசியமாகின்றது.

இதனால் மின்சக்தியை பெற்றுக்கொள்வதில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி தேவையான மின்சக்தியை உற்பத்தி செய்வது குறித்து நாம் கூடிய கவனம் செலுத்தியுள்ளோம். குறிப்பாக 365 நாட்களும் எமக்கு சூரிய ஒளி கிடைக்கின்றது.

இந்த சூரிய ஒளியைப் பயன்படுத்தி எமக்குத் தேவையான மின் சக்தியை பெற்றுக் கொள்ள முடியும்.

எமது நாடு தீவாக இருப்பதால் நாட்டைச் சூழவுள்ள கடலின் அலைகளையும், காற்றையும், நீர் வீழ்ச்சிகளையும் பயன்படுத்தி மின்சாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# நாட்டில் 23,000 கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை

(கொழும்பு)

இன்று எமது நாட்டிலுள்ள குடும்பங்களுக்கு அதிக செலவாக அமைவது, குழந்தைகளின் கல்விக்கான செலவாகும்.

அதற்கான காரணம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கும் பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதாகும். அதற்கான காரணம் அங்குள்ள வளங்களாகும். அதற்காக முயல்வது பிழை அல்ல.

ஏனென்றால் இன்னும் இந்நாட்டிலுள்ள பாடசாலைகளில் 23,000 கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது.



தொழில்நுட்பத்தை எடுத்துக்கொண்டால் 5,000 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது.

அதற்கான காரணம்சென்ற காலங்களில் போதுமான நிதி கல்விக்காக ஒதுக்கப்படாமையாகும். இந்நிலைமையை மாற்றுவதற்காக எமது அரசு 5,000 ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டது என அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

"இந்த அரசின் கீழே நாங்கள் 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 2 பாடசாலைகள் வீதம் தெரிவு செய்து அபிவிருத்தி செய்யவிருக்கிறோம்.

அத்துடன் மொனறாகலை மாவட்டத்தில் 121 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளின் அளவுக்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

மாளிகா தன்னை மகா வித்தியாலயமும் அதில் ஒன்று. இந்த வருடத்திற்காக மாத்திரம் நாங்கள் 548 இலட்சம் ரூபாவினை இப்பாடசாலைக்கு ஒதுக்கியுள்ளோம். எங்களுடைய நோக்கம், கல்விமான்களால் நிறைந்த தேசம் ஒன்றை உருவாக்குவதாகும்." என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி படல்கும்புறை, மாளிகா தன்னை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7-10)

# செய்தித்துளிகள்

## குறுந்திரைப்படத் தயாரிப்பாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் சிறந்த குறுந்திரைப்படத் தயாரிப்பாளருக்கான தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2015,2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் வெளியிட்ட குறுந்திரைப்படங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஒருவர் இரண்டு குறுந் திரைப்படங்களுக்கு மேல் சமர்ப்பிக்கக்கூடாது. முழுப்பெயர், விலாசம், கிராம அலுவலர் பிரிவு, பிறந்த திகதி ஆகியன முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டும். குறுந்திரைப் படப் பிரதியுடனான விண்ணப்பங்களை நாளை மறுதினம் 22 ஆம் திகதிக்கு முன்பாக நல்லூர் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கும்படி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

## அத்தியார் இந்துக் கல்லூரியில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்

யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் மாணவர் பாராளுமன்றத் தேர்தல் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கண்காணிப்பாளர்களாக நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்களான அ.சுரேந்திரகுமார் கல்வி உத்தியோகத்தராகவும் நி.திலீப்குமார் பதில் கணக்குப் பதிவாளராகவும் கடமையாற்றவுள்ளனர் என பாடசாலை அதிபர் கே.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார். (இ-3)

## சிறுகதைப் பயிலரங்கு

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள சிறுகதைப் பயிலரங்கு நாளை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். இச்சிறுகதைப் பயிலரங்கில் சிறுகதை தொடர்பில் ஆர்வமுள்ள மாணவர்களை பங்குபற்றும்படி பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ-3)

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை யாழ். ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் நிறுவுநர் நினைவு தினமும் 6 ஆவது பரிசளிப்பு விழாவும் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தர்மலிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் ஆசியுரையினை கொற்றன்கட்டு ஞான வைரவர் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ஸ்.கோபாலசர்மா வழங்குவார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வணிக மற்றும் முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.விஜயகுமாரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தேவமனோகரன், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர் ந.தயாபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையினை ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ம.கோணேஸ்வரன், பரிசில்களை யாழ். திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளர் அனித்தா விஜயகுமாரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-3)

## வீதியில் கையேந்தினால் இனி சிறைவாசம் தான்

### யாசகர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பின் பல்வேறு பிரதேசங்களில் வீதி சமிக்ஞை விளக்குகள் உள்ள பகுதிகளில் யாசகம் செய்பவர்களை கைது செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பதாக சாரதிகளால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸாரால் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சாரதிகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களை தடுப்பதற்கும், வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கும் இது சிறந்த நடவடிக்கை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு கைது செய்யப்படுபவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக யாசகர்களை பொலிஸார் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலைநித்தம்

பல்வேறு கோரிக்கைகளை முன வைத்து யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றைய தினம் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஊழியர்கள் தரப்பால் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் பதிவாளருடாக துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட கடிதங்கள் சம்பந்தமாக உரிய தீர்வுகள் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையிலேயே குறித்த அடையான வேலைநிறுத்த போராடடத்தை முன்னெடுத்திருந்தனர்.





படங்கள்:-சோபிகா

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் புகார்கள் அசமந்தப் போக்கிலேயே கையாளப்படுகின்றன, அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்ட காலத்தில் பல அலுவலகங்கள் முறையாக திறக்காத நிலையில் பொதுவான வரவுப்பதிவேட்டில் கையெழுத்திட்ட பயிலுநர்களின் கொடுப்பனவானது ஏனைய பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்டுள்ள போதும் யாழ்.பல்கலைக் கழகத்தில் மட்டும் வழங்கப்படாமை.

இதே காலப்பகுதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவிக்காத நிலையில் கடமைக்கு சமூகமளிக்காத நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு முழுமையான சம்பளம் வழங்கப்பட்டதோடு அவர்களின் விடுப்புகளில் அந்நாட்கள் கழிக்கப்படவுமில்லை.

காலா காலமாக தொடரும் சீருடை, பாதணி, மழையங்கி வழங்குவதில் தாமதம், நிர்வாகக் கிளையில் தொடரும் பாரபட்சமும், நிர்வாக முறைகேடுகளும், இதுவரை ஊழியர்களின் உள்ளக சம்பள கணிப்பீட்டு தவறுகள் தொடர்பாக தாபனக்கிளை உரிய நடவடிக்கைகள் எடுக்காத நிலை,

மிக அண்மையில் 10 வருடங்களாக ஒரு ஊழியரின் சம்பளக் கணிப்பீட்டில் இடம்பெற்றுவந்த தவறு கண்டுபிடிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோர் நூற்றுக்கும் அதிகமானோர் உள்ளனர். இவ்வருடம் மே மாதம் வெளிவந்த சுற்று நிருபம் ஒன்றின் பிரகாரம் பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகளின் அடிபபடைச் சம்பளத்தில் படியேற்றம் செய்யப்படவேண்டும். ஆனால் அது இதுவரை இடம்பெறவில்லை.

சிலரின் வருடாந்த சம்பள உயர்வு வழங்கல் பொருத்தமான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில் வழங்கப்படாது நிலுவையில் உள்ளது.

2008 மற்றும் அதற்கு பின்னர் நியமனம் பெற்ற சிலவகை ஊழியர்களின் கல்வி தராதர சான்றிதழ்களை ஒப்பிட்டு சரிபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலை காணப்படுகிறது.

அமையரீதியில் பணியாற்றி வரும், பணியாற்றி சேவை முடிவுக்கு கொண்டு வரப்பட்டவர்களின் பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை.

25வருடகால சேவையை பூர்த்தி செய்தோரில் சில வகையானோருக்கு அதற்கென வழங்கப்படவேண்டிய கொடுப்பனவு வழங்கப்படவில்லை, பரீட்சைக்கொடுப்பனவு வழங்கலில் ஊழியர் மத்தியில் பாரபட்சமும் சில சுற்றுநிருபங்களை தவறாக வியாக்கியானம் செய்தலும் தொடர்கிறது . பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இடமாற்ற சபையின் தீர்மானத்தின் பிரகாரம் வவுனியா வளாகத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் பெற்ற ஊழியர் ஒருவரின் இடமாற்றத்தை அமுலாக்க தொடர்ந்தும் மறுக்கப்படுகின்றமை போன்ற மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் குறைகேள் குழு, பேரவையால் நியமிக்கப்பட்ட மூவர் குழு, பதிவாளர், நிதியாளர் போன்றவர்களுடன் நேரடியாக பல தடவைகள் உரையாடப்பட்டபோதிலும் போதுமான முன்னேற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை .

இது தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி கடிதம் மூலம் பதிவாளர், துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி மேற்குறித்த அடையாள வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-9)

# தமிழ் சினிமா வரலாறு

## நாகராஜன் டைரக்‌ஷனில் எம்.ஜி.ஆர். 279

தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் சினிமாஸ்கோப் படமான ராஜராஜ சோழன் படத்துக்கு வசனம் எழுதி டைரக்ட் செய்தவர் ஏ.பி.நாகராஜன்.

எம்.ஜி.ஆர். நடிக்க நவரத்தினம் என்ற படத்தை நாகராஜன் எடுத்தார்.இதில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக 9 கதாநாயகிகள். 05.03.1977 இல் இந்தப்படம் வெளிவந்தது. நாகராஜன் வசனம் எழுதி இயக்கிய கடைசிப் படம் இதுதான்.

1953இல் திரை உலகில் நுழைந்த ஏ.பி.நாகராஜன் 1977 வரையில் 25 ஆண்டு காலம் தமிழ்ப்பட உலகின் முக்கிய கலைஞர்களில் ஒருவராக விளங்கினார்.

ஏ.பி.நாகராஜன் கடும் உழைப்பாளி. 1970இல் அவருக்கு முதல் முறையாக மாரடைப்பு ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பின் அவர் குணம் அடைந்தார்.

''உங்களுக்கு மாரடைப்பு ஏற்பட்ட 2 காரணங்கள். முதலாவது உடல் பருமன். இரண்டாவது அதிக உழைப்பு.இரண்டையும் குறைத்துக்கொள்ள வேண்டும்'' என்று வைத்தியர் கூறினார்.

உடல் பருமனை குறைக்க வழி இருந்தால் சொல்லுங்கள். அதன்படி செய்கிறேன். ஆனால் உழைப்பைக் குறைக்க இயலாது. உழைப்புதான் எனக்கு தெய்வம் என்று நாகராஜன் பதில் அளித்தார். அதன்படியே கடுமையாக உழைத்து வந்தார்.

### 50ஆவது வயதில் மரணம்

1977ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த ஏ.பி.நாகராஜன் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள தனது தோட்டத்தில் ஓய்வு எடுத்து வந்தார்.

சில நாட்கள் கழித்து ஏப்ரல் முதலாம் திகதி நள்ளிரவில் அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. குடும்பத்தினர் உடனே வைத்தியருக்கு தகவல் கொடுத்தனர்.

வைத்தியர் வருவதற்குள் செய்தியைக் கேட்டதும் எம்.ஜி. ஆரும் அவரது மனைவி ஜானகி அம்மாளும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

### குடும்பம்

நாகராஜனின் மனைவி பெயர் ராணி அம்மாள். இவர்களுக்கு வெங்கடசாமி, பரமசிவம் என்று இரண்டு மகன்கள். விஜயலட்சுமி என்ற ஒரு மகள்.

வெங்கடசாமி காலமாகி விட்டார். பி.கொம் பட்டதாரியான பரமசிவம் கட்டடக் கலையில் பயிற்சி பெற்று சென்னையில் கட்டடங்கள் கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளார். ஸ்மைல் என்ற பெயரில் நற்பணி அமைப்பு ஒன்றையும் நடத்தி வருகிறார்.



நாகராஜனின் மகன் பரமசிவம், தன் மனைவி, மகள்கள், மகன் ஆகியோருடன்

இவர் மனைவி பெயர் சசிகலா. இந்த தம்பதிகளுக்கு சந்தியா,பூஜா என்ற மகள்களும் ஆதித்யா என்ற மகனும் உள்ளனர்.

### காரணம் என்ன?

நவரத்தினம் நன்றாக ஓடவில்லை என்றும் அதனால் ஏ.பி. நாகராஜனும் அவர் குடும்பத்தினரும் நலிவடைந்தனர் என்றும் திரைப்பட உலகில் ஒரு பேச்சு உண்டு. இது பற்றி நாகராஜனின் குடும்ப நண்பர் ஒருவர் கூறியதாவது,

நவரத்தினம், எம்.ஜி.ஆர். நடித்து ஏ.பி.நாகராஜன் தயாரித்த படம். அப்படத்தை நாகராஜன் நல்ல விலைக்கு ஏற்கனவே விற்றுவிட்டார். அதனால் அவருக்கு இலாபம் தான்.

விநியோகஸ்தர்களுக்கு கொஞ்சம் நட்டம் ஏற்பட்டது உண்மை. அவர்கள் ஏற்கனவே திருவிளையாடல், தில்லானா மோகனாம்பாள் போன்ற படங்களின் மூலம் நிறைய இலாபம் சம்பாதித்தவர்கள். எனவே இப்போதைய சிறு நட்டம் அவர்களைப் பாதிக்கவில்லை.

இவ்வாறு நாகராஜனின் குடும்ப நண்பர் கூறினார்.

### அரசியல்

தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சியிடம் மிகுந்த பக்தியுள்ளவர் நாகராஜன். தமிழரசு கழகத்தில் உறுப்பினராகி திருத்தணி போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார். நடிகராக இருந்த காலத்தில் சாட்டை என்ற பெயரில் ஒரு பத்திரிகையையும் நடத்தினார்.

(தொடரும்)

நேர்வழியில் அடைய முடியாததை ஒரு நாளும் குறுக்கு வழியில் அடைந்துவிட முடியாது.
~ கதே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிங்களவருக்காக சென்றவரும் எங்களவருக்காக சென்றவரும்

வரலாறுகள் மட்டுமே திரும்ப திரும்ப பேசப்படுபவை. அதற்காக திரும்ப திரும்ப பேசப்படுபவை வரலாறு ஆகிவிடாது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

அதேவேளை வரலாறுகள் உள்ளதை உள்ளபடி சொல்வதாகவும் இருக்க வேண்டும்.

எனினும் இலங்கையில் பேரினவாதிகள் முதலில் ஆரம்பித்த இனவன்மம் வரலாறுகளை திரிபுபடுத்தியதுதான்.

இலங்கை திருநாட்டில் தமிழ் மன்னர்களின் ஆட்சிகளை மறைத்தல் சிங்கள ஆட்சியே இந்த நாட்டில் இருந்ததாக காட்டாப்புக்கள் என வரலாறுகளை திரிபுபடுத்தி அவற்றை பாடப்புத்தகங்களில் பதிப்பிட்டு மாணவர்களை கற்க வைத்து இந்த நாட்டில் ஒரு பிழையான வரலாற்றை பதிவு செய்யும் கயமைத்தனமே இலங்கையில் இன்றுவரை இனப்பிரச்சினை நீடித்து நிலைப்பதற்கு காரணமாகும்.

உண்மையான வரலாற்றை இந்த நாட்டின் ஆட்சிப்பீடம் பதிவு செய்திருக்குமாயின் இந்த உலகுக்கு இலங்கை ஒரு சமாதான நாடாக காட்சி கொடுத்திருக்கும்.

அதாவது இலங்கையில் சிங்கள தமிழ் இன ஒற்றுமை ஏற்பட வேண்டும் என சிங்கள ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் அவர்கள் பாடப் புத்தகங்களில் சேர் பொன்.இராமநாதன் அவர்கள் சிங்கள மக்களைக் காப்பாற்றிய வரலாற்றை–சிங்கள மக்கள் சேர் பொன்.இராமநாதனை குதிரை வண்டியில் இருத்தி இழுத்து வந்த காட்சியை பதிவு செய்திருக்க வேண்டும்.

அவ்வாறானதொரு பதிவு பாடப்புத்தகங்களில் இருந்திருக்குமாயின் ஒரு தமிழன் சிங்கள மக்களைக் காப்பாற்றினான் என்ற உண்மை ஒவ்வொரு சிங்கள மக்களின் மனங்களிலும் ஆழப்பதிந்து இருக்கும்.

கூடவே தம் இனத் தலைவர் செய்த உதவியை சிங்கள மக்கள் நன்றியோடு நினைவுகூருகின்றனர் என்ற உவகையில் சிங்கள மக்கள் எங்கள் சகோதரர்கள் என்று தமிழ் மக்கள் நினைத்திருப்பர். ஆனால் அதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை.

மாறாக தம்மைக் காப்பாற்றிய சேர் பொன். இராமநாதனை குதிரை வண்டியில் வைத்து இழுத்து வருவதை முன்னைய பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் காட்சிப்படுத்தியிருந்த போதிலும் பின் நாளில் அந்தக் காட்சிப் படம் அகற்றப்பட்டது.

ஆக, தமிழ்த் தலைவர்கள் செய்த பெரு உதவிகளைகூட சிங்கள ஆட்சியாளர்களும் வரலாற்று ஆசிரியர்களும் மறைப்புச் செய்து தமிழ் மக்கள் தங்களின் எதிரிகள் என்பது போல காட்டுவதிலேயே அவர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

இருந்தும் சேர் பொன்.இராமநாதன் அவர்கள் லண்டனுக்குச் சென்று பேசியதால்தான் சிங்கள மக்கள் இன்று ஆட்சியில் உள்ளனர் என்பது மறைக்கப்பட்டு போகாது.

ஆக, அன்று சிங்கள மக்களை காப்பாற்றுவதற்காக தமிழ்த் தலைவர் சேர் பொன். இராமநாதன் லண்டனுக்குச் சென்றார்.

ஆனால் இன்று வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் எங்களுக்காக லண்டனுக்குச் சென்றுள்ளார். ஆம் இந்த நாட்டின் இரண்டு தமிழ் தலைவர்களின் லண்டன் பயணம் ஒரு வரலாறு ஆகியுள்ளது.

அதில் ஒன்று சிங்கள மக்களை காப்பாற்றுவதற்காக சேர் பொன். இராமநாதனின் லண்டன் பயணம் மற்றையது எங்களுக்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் லண்டன் சென்றது. இந்த இரு பயணங்களும் முக்கியமானவை. அதில் முன்னையது அவர்களுக்கானது. பின்னையது எங்களுக்கானது.

இதை நாம் கூறும் போது முன்னையது நடக்காமல் இருந்திருந்தால் பின்னையது தேவைப்பட்டிருக்காது என்று கருத்துரைப்போரும் இருக்கலாம். அவ்வாறானதொரு கருத்துரைப்பு எழுமாக இருந்தால் அதை மறுதலிக்கவும் முடியாது.

எதுவாயினும் ஆன்மிக பலம் கொண்ட இரண்டு தமிழ்த் தலைவர்களின் லண்டன் பயணம் முக்கியமானது. அதில் இரண்டாவது பயணம் தமிழ் மக்களுக்கு நன்மையானதாக அமைய வேண்டும் என்பது எம் பிரார்த்தனை.

அதேவேளை அவர்கள் சொல்ல மறந்த வரலாற்றை நாம் சொல்லலாம் அல்லவா! அதைச் செய்வதற்கு எங்கள் வரலாற்று ஆசிரியர்களும் தமிழ் அரசியல் தரப்புக்களும் கூடி திட்டமிட்டு எங்கள் வரலாற்றை ஆவணப்படுத்த – காட்சிப்படுத்த ஏதோ ஒரு வகையில் எங்கள் மாணவர்கள் கற்க வகை செய்ய வேண்டும். அப்போதுதான் எங்கள் பெருமையை–வரலாற்றை நாங்கள் அறியமுடியும்.

# நல்லாட்சி இந்து மதத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கின்றதா?

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கேள்வி

அநுராதபுரம் முத்துமாரி அம்மன் கோவில் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எம்.பி நல்லாட்சி அரசு இந்து மதத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றதா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அநுராதபுரத்தின் பழைய நகரத்தில் உள்ள முத்துமாரி அம்மன் கோவிலில் நவராத்திரி விரதத்தின் இறுதி நாளான விஜயதசமியன்று ஆராதனைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அங்கு வருகைதந்த அடியவர்கள் விரப்பட்டுள்ளதோடு சிலைகளும் சிதைக்கப்பட்டன. இச்சம்பவம் குறித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இனங்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்குவோம், சம உரிமையை உருவாக்குவோம், இன நல்லிணக்கத்தை உருவாக்குவோம் என்பது உட்பட பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வழங்கி தமிழ் மக்களின் ஆணையின் உதவியோடு நல்லாட்சியை முன்னெடுப்பதாகக் கூறி தேசிய அரசாங்கமாக தற்போதைய ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார்கள்.

தற்போது இருபது மாதங்களாகின்ற நிலையில் சிறுபான்மை தேசிய இனங்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கும் எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வில்லை. ஏற்கனவே இணக்கம் ஏற்பட்டிருந்ததன் அடிப்படையில் ஆங்காங்கே நில விடுவிப்புக்கள் இடம்பெற்று வருகின்றதே தவிர புதிதாக ஏதுவும் நடைபெறவில்லை.

இந்த விதமான நிலைமைகளுக்குள் தற்போது அநுராதபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் சிலைகள் சிதைக்கப்பட்டு அங்கு வருகை தநத அடியார்கள் மீதும் மிலேச்சத்தனமாக தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின் றன.

கடந்த கால ஆட்சியாளர்களை போன்று இழைக்கப்பட்ட அனைத்து அநீதிகள், மோசடிகளை ஒழித்து மறைத்து பாரபட்சமாக செயற்படாது பக்கச்சார்பற்ற விசாரணையொன்றை முன்னெடுக்கவேண்டியது மிக மிக அவசியமாகின்றது. இதனை தாமதமின்றி முன்னெடுத்து மிலேச்சத்தமான இச்செயலுடன் தொடர்புடைய வர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பதோடு எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# 48 மருந்துப் பொருட்களுக்கான விலைகள் குறைப்பு

## உடனடியாக அமுலுக்கு வருவது சாத்தியமில்லை

(கொழும்பு)

நாளை முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கையில் 48 மருந்துப் பொருட்களுக்கான விலைகள் 50 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சேனக பிபில கடந்த 45 வருடங்களுக்கு முன்னர் அறிவித்த ஔடத விலைச் சூத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

"ராஜித சேனாரத்ன "நான் எந்தக் கட்சியில் போட்டியிடுகின்றேன் என்ற கேள்விக்குறியான நிலையில் இருந்த போது நான் அரசியலில் போட்டியிட்டால் மருந்து விலைகள் தொடர்பிலான சூத்திரத்தை உருவாக்கி தருவதாக மருந்தாக்கல் சபையின் தலைவரிடத்தில் கூறிவிட்டு சென்றிருந்தேன். அதற்கான தருணம் தற் போது கிடைத்துள்ளது. முன்னரும் இதுபற்றி பேசப்பட்ட போதும் செயற்பாட்டில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்தியா, ஐரோப்பியா மற்றும் அமெரிக்க கலிபோர்னியாவில் இது நடைமுறையில் உள்ளது. அந்த கொள்கையை பின்பற்றவில்லை. எனினும் மருந்தாக்கல் தொடர்பில் எமது தனித்துவம் பேணப்பட வேண்டும்.

மருந்து விலைகள் இரண்டு விடயங்களை கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. உள்நாட்டு மருந்துகளுக்கு கேள்விக்கு ஏற்ப விலை தீர்மானிக்கப்படும். இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கு உற்பத்தி செய்யப்பட்ட நாடுகளில் விலை தீர்மானிக்கப்படும்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் பெரும்பாலும் பல்தேசிய நிறுவனங்களாகவே உள்ளன. அவை இலங்கைக்கு வரும் போது வரி மற்றும் காப்புறுதிக்கான செலவுகளின் பின்னர் வியாபாரிகளுக்கு தரகுப் பணம் மாத்திரமே இலாபமாக மிஞ்சுகின்றது.

சிறு வியாபாரிகள் இறக்குமதி செய்யும் போது அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று அங்கு குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர். அதனால் அவற்றின் பெறுமதி குறைவாகவே உள்ளது. பேராசிரியர் சேனக பிபிலவின் திட்டத்தை அடிப்படையாக கொண்டே நாம் விலை சூத்திரத்தை தயாரித்துள்ளோம். அதற்கமைவாக இலங்கையில் எந்த மருந்து அதிகம் கொள்வனவு செய்யப்படுகின்றதோ.அது தொடர்பில் ஆராய்ந்து அந்த மருந்து வகைகளின் விலைகளை குறைப்பது எவ்வாறு என்பது தொடர்பிலேயே ஆராய்ந்தோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

## பனைவளம் காப்போம்

நாம் வாழுகின்ற சூழல் உடல் வளம் பேணும் பனைவள உணவுப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. தொழில்நுட்ப விருத்தி காரணமாக மிகக்குறுகிய காலத்தில் பனையில் இருந்து பயனைப் பெறக்கூடிய வழிவகைகளும் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் இவ்வளங்கள் அழிக்கப்பட்டு வருவதும் உரியவாறு பராமரிப்பு இன்றி இருப்பதும் பனை வளங்களை வீண் விரயம் செய்வதும் மானுட விரோத செயல் எனக் கொள்ள முடியும். இவை அனைத்தும் நிறுத்தப்படவேண்டும். இதன் மூலம் நாமும் எமது வருங்காலச் சந்ததியினரும் பயன் அடையக்கூடிய வழி ஏற்படும்.

**"வீட்டுக்கு ஒரு பனைவிதை நடுகை செய்து பராமரித்து பனைவளம் காத்து பனைவளம் காப்போம்"**

**"நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்"**

அன்பே சிவம்! அன்பே சிவம்! அன்பே சிவம்!

சாந்தி! சாந்தி! சாந்தி!

கிழவி தோட்டம்
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

நாகலிங்கம் சற்குணநாதன்
சிவ தொண்டர்
சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்
முகாமைத்துவ உதவியாளர்
சந்தைப்படுத்தல் பகுதி
பனை அபிவிருத்திச் சபை

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருநது 6 மணி வரை **யாழ்.பிரதேசததில் அச்செழு, தோப்பு, அச்சுவேலி, அச்சுவேலி வல்லை** வீதி, பலாலி தெற்கு, செல்வநாயகபுரம், பத்தமேனி, பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பெரியார்குளம் (பூந் தோட்டம்), வவுனியா நகரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## கிளிநொச்சி காட்டுப் பகுதியில் மண்ணகழ்ந்த ஆறு பேர் கைது

கிளிநொச்சி வன்னேரிக்குளம் காட்டுப்பகுதியில் மண் ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரம் இருந்தும் காட்டுப் பகுதியில் மண் ஏற்றினார்கள் என்ற குற்றச்சாட்டில் ஆறுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட குழுவினருக்கு நேற்று முன்தினம் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குழுவினர் குறித்த பகுதிக்கு சென்று முற்றுகை இட்டதனை அடுத்து மண் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் இருந்தும் காட்டுப்பகுதியில் மண் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்ரக வாகனங்கள் மற்றும் ஒரு ஜேசிபி ரக வாகனத்துடன் சாரதிகள் உட்பட ஆறுபேரை கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட வாகனங்கள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஆறுபேரையும் கிளிநொச்சி நீதவான் நீதிமனறில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-312)



# தேசிய விளையாட்டுப் போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி சாதனை





அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி 2016 இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரி தங்கம், 1 வெள்ளி 1, வெண்கலப் பதக்கங்கள் 2 மொத்தமாக 4 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆ.புவிதரன் 17 வயதிற்குட்பட்ட கோலூன்றிப் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும் வர்ணச் சான்றிதழ்களையும் ச.சங்கவி 17 வயதிற்குட்பட்ட வெள்ளிப்பதக்கத்தையும் ஈட்டி தட்டிலும் வர்ணச் சான்றிதழ்களையும் ப.கிரிஜா 19 வயதிற்குட்பட்ட பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் கபடிக் குழு வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (கு-29)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம் சென்றலைட்ஸ் அணி முன்னிலை



ஜோர்ஜ் வெப்ஸ்டர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 7 ஆவது ஆண்டாக நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01. 01.2016 தொடக்கம் 31.08.2016 வரை நடைபெற்ற 145 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி 19 போட்டிகளில் பங்குபற்றி 16 போட்டிகளில் வெற்றி பெற்று 125. 73 புள்ளிகளை பெற்று முன்னிலையில் உள்ளது. கே.சி.சி.சி அணி 20 போட்டிகளில் பங்குபற்றி 15 போட்டிகளில் வெற்றி பெற்று 119. 24 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் திருநெல்வேலி சி.சி. அணி 22 போட்டிகளில் பங்குபற்றி 16 போட்டிகளில் வெற்றிபெற்று 111.17 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும் மானிப்பாய் பரீஸ் 4 ஆம் இடத்திலும் ஜொலிஸ்ரார் 5 இடத்திலும் ஜொனியன்ஸ் 6 ஆம் இடத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணி 7 ஆம் இடத்திலும் கிறாஸ் கொப்பர்ஸ் 8 ஆம் ஓல்ட்கோல்ஸ் 9 ஆம் இடத்திலும் சென்றல் 10 ஆம் இடத்திலும் உள்ளன.

2010,2011 ஆம் ஆண்டுகளில் யாழ்பல்கலைக்கழக அணியும் 2012 ஆம் ஆண்டு கே.சி.சி.சி. அணியும் 2013 ஆம் ஆண்டு யாழ்.ஜொனியன்ஸ் அணியும் 2014,2015 ஆம் ஆண்டுகளில் சென்றலைட்ஸ் அணியும் முதலிடத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்க அனுமதியுடன் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான B பிரிவினருக்கான கரப்பந்தாட்ட போட்டியில் இன்று இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி யூத் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)




அகில இலங்கை பாடசாலைக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சார்பில் ஆண்கள் பிரிவில் 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் 5 ஆம் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளனர். அவ் அணியினரை படத்தில் காணலாம்.

# வடக்கின் வல்லரசன் தொடர் யங்ஹென்றீஸ் - யங்கம்பன்ஸ் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது





வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வட மாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் 16.10.2016 அன்றைய குப்பிளான் குறிஞ்சி குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற மின்னொளியிலான லீக் சுற்றில் இளவாலை யங்ஹென்றீஸை எதிர்த்து சம்பர்மலை யங்கம்பன்ஸ் மோதியது.

ஆட்டத்தின் முதலாவது பாதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் பின் கள வீரர்களை கடந்து கோல் போட முற்பட்டனர் யங்ஹென்றீஸ் வீரர்கள். யங்கம்பன்ஸ் கோல் காப்பாளர் மகிந்தனின் சிறந்த கோல் காப்பின் மூலம் கோல் வாய்ப்புக்கள் முறியடிக்கப்பட்டன.

முதல் பாதியாட்டம் எதுவித கோல்களும் பெறப்படாத நிலையில் ஆட்டம் நிறைவுற்றது. இரண்டாவது பாதியின் 31 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் வீரர் வின்ஷசன் கோல் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். 39 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் வீரர் வின்ஷசன் கோல் போட ஆட்டம் யங்ஹென்றீஸ் வசம் இருந்தது. போட்டியில் யங்ஹென்றீஸ் வெற்றி என்பதை நினைத்த பார்வையாளர்கள் மைதானத்தை விட்டு வெளியேறும் அந்த தருணத்தில் 41 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் நம்பிக்கை நட்சத்திரம் பிரகாஷ் நீண்ட தூரத்திலிருந்து அற்புதமான கோலை போட்டு ஆட்டத்தின் போக்கினை மாற்றினார்.

அடுத்த 47 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் வீரர் நிரோஜன் கோல் போட்டு ஆட்டத்தை சம நிலைப்படுத்தினார். இறுதியாட்ட நேர முடிவில் 02:02 என்ற கோல் அடிப்படையில் ஆட்டம் சமநிலையானது.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக பிரகாஷ் 01, நிரோஜன் 01 கோல் போட்டனர். போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் கோல் காப்பாளர் மகிந்தன் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான பதக்கத்தினை உதைபந்தாட்ட ஜாம்பவான் ஊரெழு றோயல் அணியின் நட்சத்திர வீரர் தர்மகுலசிங்கம் (வெள்ளை) அணிவித்தார். (கு)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

வவுனியா வளாகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா வளாகம் நடத்தும் வவுனியா மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டியானது எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பம்பைமடு வவுனியா வளாக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியானது அணிக்கு 06 பேர் 5 பந்துப் பரிமாற்றங்களை கொண்டதாகும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் வவுனியா வளாக உடற்கல்வி போதனாசிரியரிடம் 077 384 1023 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ள முடியும். (கு)

## சுழிபுரம் றோட்டறக் கழகம் நடத்தும் மென்பந்தாட்டம்

சுழிபுரம் றோட்டறக் கழகம் நடத்தும் மென்பந்துச் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டியானது அணிக்கு 9 பேர் 8 பந்து பரிமாற்றங்கள் கொண்டதாக அமையும்.

போட்டிக்கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படுவதோடு வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்தோடு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் விளையாட்டுக்கழகங்கள் 077 513 4348 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (கு)



யாழ்ப்பாணம் - கிங்ஸ்டன் இரு நகர ஒப்பந்தத்திற்காக லண்டன் விஜயம் செய் துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை, ஈழத் தில் இடம் பெற்ற தமிழினப் படுகொலைகளை காணொலி ஆதாரங்களுடன் வெளிக் கொணர்ந்த சனல் 4 ஊடகவியலாளர் கெலம் மக்ரே நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

## மகிந்த விட...

அந்நாட்டு அரசரிடம் அனுமதி கேட்டு கடிதமொன்றை அனுப்புவதற்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் வீட்டுக்கு ஒருநாள் வந்து கையெழுத்து வாங்கினார்.

ஒரு மணி நேரம் கழித்து மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதிக்கு அலைபேசி ஊடாக அழைத்து "எனக்கெதிராக கடிதமொன்றில் கையெழுத்திட்டீர்கள் தானே" என்று கேட்டுள்ளார் என சுகாதார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ராஜித சேனாரத்ன நேற்று தெரிவித்தார்.

அரசாங்கம் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். (செ-11)

## பஸ்-மோ...

கைதடிச் சந்திப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ். தச்சன்தோப்பைச் சேர்ந்த சகாதேவன் யோகன் (வயது 36) என்ற குடும்பஸ்தரே சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் விபத்து தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## முன்னாள் இராணுவ அதி...

தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்ட 52 வயதுடைய இளந்தாரிகே ஜயமான்னவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக இரகசிய பொலிசார் தெரிவித்ததை அடுத்தே கேகாலை நீதவானின் உத்தரவிற்கு அமைய சடலம் நேற்று தோண்டி எடுக்கப்பட்டிருக் கின்றது.

கேகாலை கரடுபன பிரதேசத்தில் வசித்துவந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவில் சாஜன் மேஜர் தர அதிகாரியாக 28 ஆண்டுகள் கடமையாற்றிய நிலையில் ஓய்வு பெற்ற 52 வயதுடைய இளந்தாரிகே ஜயமான்ன கடந்த 14 ஆம் திகதி அவரது வீட்டிலுள்ள சமையல் அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டிருந்தார்.

தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னர் அவர் எழுதி வைத்திருந்ததாகக் கருதப்படும் கடிதமொன்றும் சடலத்திற்கு அருகிலிருந்து மீட்கப்பட்டிருந்தது. அதில் லசந்த விக்கிரமதுங்கவை தானே கொலை செய்ததாகவும், அவரது கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள இராணுப் புலனாய்வு அதிகாரிக்கு தொடர்பில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த தற்கொலை விவகாரம் தொடர்பில் இரகசியப் பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்த நிலையில் புதைக்கப்பட்ட சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. (செ-11)

## போலி ஆவண முறைகேடு...

நாயக்கவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் இரகசியமாக செய்து கொள்ளப்பட்டதாக கூறப்பட்டு ஆவணம் ஒன்றை திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டிருந்தார். இந்த ஆவணம் போலியானது என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த ஆவணம் தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்க மீது சட்டமா அதிபரால் மூன்று குற்றங்களின் கீழ் கடந்த செப்டெம்பர் மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதிமோசடி தொடர்பான வழக்கு 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று புதன் கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.யூ.கருணாதிலக முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது திவிநெகும திணைகள நிதியை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்ட போது, தாம் நிரபராதிகள் என பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வரும் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கமைய இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் அடுத்த வருடம் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திவிநெகும திணைக்களத்தின் பணிப்பாளர் கீத்சிறி ரணவக்கவும் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சில்லறை விசாரணை குறி...

சுமத்தினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

அவன்காட் விவகார வழக்கில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவர் நீதிமன்றிற்கு அழைத்திருந்தமை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுவதாகவும் ஜனாதிபதி சாடியிருந்தார். இது குறித்து நேற்றைய அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன விளக்கமளித்தார்.

ராஜபக்ஷக்கள் மக்களிடம் இருந்து கொள்ளையடித்த பெருந்தொகைப் பணம் டுபாய் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் அளித்திருந்தபோதிலும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமையிட்டு ராஜித சேனாரத்ன தனது அதிருப்தியினையும் இதன்போது வெளியிட்டார்.

முன்னாள் கடற்படைத் தளபதிகளும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் நீதிமன்றில் முன்னிலையான போது அனைத்து ஊடகங்களும் இதனை செய்தியாக வெளியிட்டிருந்தன.

இதுகுறித்து ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்ததோடு அதில் குறித்த கடற்படை முன்னாள் முப்படைத் தளபதிகள் குறித்தே ஜனாதிபதி தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தாரே தவிர கோத்தபாய ராஜபக்ஷவுக்காக பேசவில்லை. யுத்தத்தை வென்றெடுக்க பாடுபட்ட முன்னாள் முப்படைத் தளபதிகளை நீதிமன்றம் வரை கொண்டு செல்வதால் முப்படையினருக்கும் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதிக்கும் இடையே விரிசல் ஏற்படும். இதனையே ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ஊடகங்கள் இதனை திரிபுபடுத்தியதால் ராஜபக்ஷக்கள் உற்சாகமடைந்தார்கள். அதேபோல நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி நீண்ட விளக்கமொன்றை வெளியிட்டிருந்தார். அந்த வகையில் பசில் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, மகிந்தானந்த அலுத்கமகே, கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் தேர்தல் காலத்தில் மேற்கொண்ட குழாய் விநியோகம், கரம்போட் விநியோகம் போன்ற சிறுசிறு குற்றங்களுக்கே விசாரணை செய்யப்படுகிறார்கள்.

ஆனால் சுங்க வரியற்ற எத்தனோல் கடத்தியமை, ராஜபக்ஷக்களினால் பொதுமக்களின் பணத்தை பகல்கொள்ளையிட்டு டுபாயிலுள்ள வங்கியில் வைப்பிட்டமை, பிரகீத் எக்னலிகொட, லசந்த விக்ரமதுங்க மற்றும் வசீம் தாஜுடீன் ஆகியோரது படுகொலைகள் குறித்து விசாரணை எங்கே? டுபாயில் வைப்பில் உள்ள பெருந்தொகைப் பணத்தில் 500 மில்லியனை எடுப்பதற்காக ஒருவர் வெளிநாட்டவர் ஒருவருடன் சென்று மீட்டுள்ளார்.

இப்படி இரண்டு முறை இடம் பெற்றுள்ளது. ஆனால் அவர் காலில் ஏற்பட்டுள்ள உபாதைக்காக சிகிச்சைப் பெறுவதாகக் கூறியே வெளிநாடு சென்றிருந்தார். இது குறித்து நான் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தேன். அதற்கடுத்த மணித்தியாலத்தில் மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த விடயம் தெரியவந்தது.

அவன்காட் கப்பலில் இருந்த துப்பாக்கிகள் ஒன்றோடொன்று வைக்கப்பட்டிருந்ததால் அவற்றின் இலக்கங்கள் தேய்ந்துவிட்டதாக அரச பகுப்பாய்வின் அறிக்கை கூறுகிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியுமா? இதற்குப் பின்னால் யார் உள்ளனர்? இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்யாமல் அமைச்சர் பௌசி வாகனம் பயன்படுத்தியது தொடர்பாக விசாரணை செய்யப்படுகின்றது.

இதேவேளை தாஜுடீனின் எலும்புகள் சீனாவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஏன் இங்கே சிறந்த மருத்துவர்கள் இல்லையா? எனவே அரசாங்கத்தை மாற்றியிருக்கின்றோம். ஆனால் ஆட்சியில் இருந்தவர்கள் நியமித்தவர்கள் இதுவரை மாற்றப்படவில்லை என்றார். (செ-11)

## வடக்கிலுள்ள இராணுவம்...

லண்டனில் நேற்று முன்தினம் மாலை கிங்ஸ்டன் மாநகர சபைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் "இரட்டை நகர" உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்று முதன்மை உரை ஆற்றியபோதே, விக்னேஸ்வரன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரித்தானியாவுக்கான இலங்கை தூதுவர் அமாரி விஜயவர்தன, கிங்ஸ்டன் நகர சபை கவுன்சிலர்கள் உட்பட நகரசபையின் அழைப்பிதழ் அடிப்படையில் பெரும் எண்ணிக்கையில் பிரித்தானியா வாழ் தமிழ் மக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

பிறிதோர் வடிவத்தில் தொடரும் பயங்கரவாத தடைச்சட்டத்தை விமர்சனம் செய்த முதலமைச்சர் பயங்கரவாத தடைச்சட்டம் அனைவருக்கும் நீதி பெறுவதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்வதாகவும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு என்ற சிந்தனைக்குள் இருந்துகொண்டு ஒரு ஒன்றிணைந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியாது என்றும் நிர்வாகமானது மனிதநேய மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு சிந்தனை ஆகியவற்றை கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறினார்.

எல்லா மட்டங்களிலும் வட மாகாண சபையானது மத்திய அரசாங்கத்தினால் ஓரங்கட்டப்படுகிறது என்றும் திட்டங்கள் மத்தியினால் முடிவுசெய்யப்பட்டு மாகாண சபை மீது திணிக்கப்படுகின்றது என்றும் அவர் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

வட மாகாண சபை தற்போது மூன்று வகையான முதலீட்டு மாதிரிகளை முன்னெடுத்து வருவதாக குறிப்பிட்ட முதலமைச்சர், அவற்றுள் முதலாவதாக மத்திய கிழக்கை அடிப்படையாக கொண்ட ஒரு முதலீட்டாளர் ஒருவர் மூலம் வெளிநாட்டு ஏற்றுமதி சந்தைக்காக வன்னியில் பாரிய ஒரு மரக்கறி மற்றும் பழப்பயிர்ச் செய்கை திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும், இரண்டாவதாக புலம்பெயர் தமிழர் ஒருவரின் முதலீட்டில் ஆடை தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதாகவும் மூன்றாவதாக வடமாகாணத்தில் போருக்கு பிந்திய புனரமைப்பு புனர்நிர்மாணம் ஆகியவற்றுக்கு தகவல் தொழில்நுட்பம் ஊடாக பங்களிக்கும் வகையில் அமெரிக்க புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிறுவனத்தின் உதவியுடன் வட மாகாணத்தில் கல்வித் திட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் இந்த இரட்டை நகர உடன்படிக்கை மூலம் பல்வேறு நலத்திட்டங்களை புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (செ-9.4)

## சிறுபான்மை சமூகங்களுக்கு...

இலங்கை சிறுபான்மை சமூகங்களுக்கு தேசிய வாழ்க்கையில் சரியான இடம்கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாக தெரிவதாக சிறுபான்மை இன விவகாரங்களை ஆராய்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரீட்டா இசாக் நாடியா, எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினரிடத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தில் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கையில் அதனை அடிப்படையாக கொண்டு சமாதானம், சகவாழ்வு, சம உரித்து அனைத்து மக்களுக்கும் இருப்பதாக சொல்ல முடியாது எனக் குறிப்பிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் முதற்கட்டமாக இராணுவத்தில் அடிப்படை பரீட்சையொன்றை மேற்கொள்ளவேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள சிறுபான்மை இன விவகாரங்களை ஆராய்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரீட்டா இசாக் நாடியாவுக்கும் எதிர்க் கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினருக்குமான சந்திப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் அரைமணிநேரமாக நடைபெற்ற இச்சந்திப்பு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளியிடுகையில்,

இந்த நாட்டில் உள்ள சிறுபான்மையினரின் பிரச்சினை முக்கியமான தொன்றாக காணப்படுகின்றது. இந்தப்பிரச்சினையே இந்நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைக்கும் அடிப்படையாக இருக்கின்றது. அதனை எவ்வாறு தீர்க்கலாம். சிறுபான்மை மக்களுக்கு இடையில் காணப்படுகின்ற சந்தேகங்கள் போன்ற அனைத்து விடயங்களையும் அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையிலேயே அவர் எதிர்க்கட்சித்தலைவர் தலைமையிலான எமது குழுவினரை சந்தித்திருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் மூலமாக வெவ்வேறு மக்கள் கூட்டங்கள் வாழும் இந்த நாட்டில் ஒவ்வொருவரும் தங்களின் இறைமையை உபயோகிக்க கூடிய வண்ணமாக பேரினவாத ஆட்சியற்றதாக புதிய அரசியலமைப்பு அமையவேண்டும். அதற்கான பரிந்துரைகளை ஐ.நா. விசேட அறிக்கையாளரான தாங்கள் செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்திருந்தார். (செ-11)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## பெயர் மாற்றம்

மயிலணி வடக்கு சுன்னாகத்தில் வசிக்கும் இராசா றிசிகேசவன் ஆகிய நான் எனது பெயரை 20.10.2016 இல் இருந்து இராசா ஸ்ரீகேசவன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன். இன்றிலிருந்து எனது சகல ஆவணங்களிலும் "ஸ்ரீகேசவன்" எனவே பயன்படுத்துவேன் என்று இதனால் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள,
ஸ்ரீகேசவன். (6380)

## நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம் **கல்யாணமாலை** இலவச திருமண சேவை நிலையத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் தேவை.

40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்/பெண்கள் இருபாலாரும் இணைந்து கொள்ள முடியும்.

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற குடும்பப் பொறுப்பு அற்ற, யாழ்.நகருக்கு அண்மையில் இருக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதியுடையோர் 20.10.2016 வியாழக்கிழமை இன்று 3.00 மணிக்கு வலம்புரி, இலக்கம் 3,2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்

(இ) -பொது முகாமையாளர்


அமெரிக்க லொத்தர் விசா
2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
அரிய வாய்ப்பு - சில தினங்களுக்கு மட்டுமே 0768226230
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்
சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 19 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | பருத்தித்துறை 0768226237 | வல்வெட்டித்துறை 0776697960
மேலும் தகவல்களுக்கு--> www.facebook.com/v2tandt
(6107)


# மரண அறிவித்தல்



## திருமதி சிவபாக்கியம் நடுநாயகம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி, வெள்ளவத்தையை (பெரேரா லேன்) வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் நடுநாயகம் நேற்று முன்தினம் (18.10.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலேசியன் பென்சனியர் சின்னையா-சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடுநாயகத்தின் (P.H.I) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அரியரத்தினம், பரிபூரணம், சேனாதிராஜா, சரஸ்வதி, தியாகராஜா, மகேஸ்வரி, புவனேஸ்வரி, விக்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனபாலசிங்கம், செல்வலக்சுமி மற்றும் காலஞ்சென்ற கனகராஜா, சரவணமுத்து, சிவபாக்கியம், ஞானாம்பிகை, இராசரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சகுந்தலாதேவி (வெள்ளவத்தை), சூரியகுமார் (அதிபர்-யா/சுதுமலை வடக்கு த.க.வித்தியாலயம்), கௌரிதேவி (கனடா), சிவகுமார் (BUILT ELEMENTS Ltd- இரத்மலானை), கிருஸ்ணகுமார் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும். பாலச்சந்திரன் (Lankem Ceylon plc) மாலினி, கருணாநிதி (கனடா), சுகந்தி (Management Assistant), திவ்வியரஞ்சினி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீபன், பிரதாபன் (வைத்தியர்), பால்ராம், சுதர்சன் (பொறியியலாளர்), ஜெனனி, பிரியதர்சன், வாசுதேவன், வாசுகி, நிதர்சனா, தரணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் மகனான சூரியகுமாரின் இல்லத்தில் (சுழிபுரம் மேற்கு) இன்று (20.10.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்

தகவல்:-குடும்பத்தினர்
தொ.பே:-0776549620

(6381)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



(6366)

## அமரர் நவரத்தினம் செல்வராசா
## (ஆசையப்பா)

எமது குடும்பத் தலைவர் அமரர் நவரத்தினம் செல்வராசா அவர்களின் மறைவுச் செய்தியறிந்து எமது துயரில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை தொலை பேசி மூலமும் இணையங்கள் மூலமும் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 16.10.2016 ஞாயிற்றுக் கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

மேலும் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளும் இன்று 20.10.2016 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனை தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில் : 22.04.1940
விண்ணில் : 20.09.2016

வழக்கம்பரை,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

தகவல்:மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.